GOKULAM

மார்ச் 2010 ▪ 80 பக்கங்கள் ▪ விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



மீண்டும் நம்பியூர்!

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

மார்ச் 2010 மலர் : 28 இதழ் : 2

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்



படியுங்கள்!

தேர்வுகள் நெருங்கிவிட்டன.

வீட்டில் அம்மா 'கவனமாப் படி'ன்னு சால்லிட்டிருப்பாங்க. பள்ளிக்குப் பானால், ஆசிரியர் படிப்புல கவனமா ருக்க வேண்டிய நேரம்'னு சொல் ட்டிருப்பாரு. அதனால், உங்களில் லருக்குக் கொஞ்சம் பதற்றமும் ற்பட்டிருக்கலாம். காரணம் தெரி ாத அச்சமும் கவலையும்கூட வந் ருக்கலாம். ஆனால், அதற்கு வசியமேயில்லை.

இந்தத் தேர்வு, உங்களுக்கான ாடங்களில் இருந்து, நீங்கள் என்ன சேகரித்திருக்கிறீர்கள் என்பதைத்தான் ாதிக்கப் போகிறது. எனவே, இதில் பெறும் மதிப்பெண் முக்கியத்துவம் பறுகிறது.

உங்களின் கவனிக்கும் திறன், புரிந்து கொள்ளும் தன்மை, செயல்படும் வகம்... இவற்றைத்தான் இந்தத் தேர்வின் மூலம் மதிப்பிடப் போகிறார்கள். தைப் புரிந்து கொண்டால் போதும். தயக்கமும் தடுமாற்றமும் உங்களை நருங்காது.

மின்விளக்கில் பயன்படுத்தப்படும் டங்ஸ்டனை, பலநூறு முறை முயற்சித்த றகே கண்டுபிடித்தார் எடிசன். வெற்றிகரமான பல்வேறு கண்டுபிடிப்புகளும் ந்த வகையில் வெளிப்பட்டவைதான். அதற்குக் காரணம், 'நம்மால் முடியும்' ன்று அவர்கள் நம்பியதுதான். அந்த நம்பிக்கையும், ஊக்கமுமே அவர்களின் வற்றிகளை அலங்கரித்தன.

அது போல, உங்களாலும் முடியும் என்பதை மனத்தில் அழுத்தமாகப் தியுங்கள். அந்த நம்பிகையோடு பாடங்களைப் படியுங்கள். நீங்கள் நிச்சயம் வல்வீர்கள்.

அன்புடன்
கோகு



மலையை

"**எ**ன்னவே தனியா புலம்பிக்கிட்டே வரீரு?"

எதிரே வந்த நண்பரைக் கேட்டார் புலவர் தனுஷ்கோடி.

"ஆமா. வீட்டுல ஈயாச் சுத்துதாம். அதுக்கு கொஞ்சம் மஞ்சத் தண்ணியை எடுத்து தெளிச்சு விட்டாப் போகுது. அதை விட்டுட்டு சும்மாப் புலம்பிக்கிட்டிருக்கா."

அதைக்கேட்ட புலவர், "வீடு ஒண்ணும் குலுங்கலையே?" என்றார். நண்பர் குழப்ப மாய்ப் பார்த்தார்.

"ஈ சுத்துச்சுன்னுதானே சொன்னேன். அதனால வீடு எப்படிக் குலுங்கும்?"

"ஈ ஏற மலையே குலுங்கியிருக்கு. என்னப்பா புரியாம பேசற?"

புலவர் பேச்சைக் கேட்ட நண்ட மறுத்தார்.

"அதெப்படிங்க, ஈ ஏறி மல குலுங்கும்? சும்மா விளையாடாதீங்க."

"விளையாட்டு இல்லைப்பா. நெசந்தா ஒரு சின்னப்புள்ளையோட கால்ல, ஒ புண் வந்திருந்துச்சு. அதைச் சுத்திச் சுத் ஒரு ஈ வந்துச்சு. அதை விரட்டறதுக்கா அந்தப் புள்ளை கையை ஆட்டிச் அப்பதான் மலையே குலுங்கிச்சு."

"இதென்னங்க ஆச்சர்யமா இருக்(எப்படிக் காயமாச்சு? யாருங்க அந்த

வாரணங்கள் எட்டும் மகமேருவும் கடலும்
தாரணியும் யாவும் சலித்தனவால் - நாரணனை
பண்வாய் இடைச்சி பரு மத்தினால் அடித்த
புண்வாயில் ஈ மொய்த்த பொழுது.

- காளமேகம்

வாரணம் - யானை
மகமேரு - மேருமலை
நாரணன் - கிருஷ்ணன்
பண்வாய் இடைச்சி - யசோ

ாளையை அடிச்சது?"

"அவங்க அம்மாதான். அந்தப் பையன் டித்தனமா இருந்தான். பாலைக் கொட்டறது; ண்ணெய் திருடுறது; கன்னுக்குட்டியை அவுத்து _றதுன்னு சேட்டையான சேட்டை. அம்மா ால்லிப் பாத்துச்சு. பையன் அடங்கலை. ஒரு ள் கோவத்துல தயிர் கடையற மத்தால் ஒண்ணு ாட்டுச்சு."

"நீங்க சொல்றதைக் கேட்டா, அந்தப் பய ாம்ப குறும்புக்காரனால்ல தெரியுது. கிருஷ்ணன் தல சொல்ற மாதிரியில்ல இருக்கு."

நண்பர் முடித்தவுடன் தொடர்ந்தார் புலவர்.

"கிருஷ்ணன் கதைல வர்ற மாதிரி இல்லை. ந்தப் பையன் கிருஷ்ணனேதான்! அவன் சேட்டை

வக்கிய ஈ!



ராகுல்

ங்காம, அவங்கம்மா யசோதை தயிர் கடையற தை எடுத்து ஓங்கினா, ஓங்கின வேகத்துல து கையிலருந்து உருவிக்கிடுச்சு. கிருஷ்ணனோட ல்ல பட்டு, புண்ணாயிடுச்சு."

"சரி; அதுக்கும் மலை குலுங்கினதுக்கும் என்ன பந்தம்?"

"என்னவே கதை கேட்ட நீரு? கிருஷ்ணன் ஸ்வரூபம் எடுத்ததா கேட்டிருக்கீருல்ல? எல் த்தையும் தன் வாய்க்குள்ள காட்டினவன்ல வன். அவன் கையை அசைச்சபோது மலை லுங்கினது சரிதானே?"

"சரிதான்; ஆனா நான் இதுவரை கேட்டதே ல்லையே?"

"ஆமா; இது கிருஷ்ணனோட கதைல இல்லை. ானா காளமேகம் உருவாக்கின கதை?" சொல்லிச் த்தார் புலவர். நண்பரும் வியந்தார். ●

கல்கி கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!


• அரோரா

வேட்டைக்காரன்!

இரவு நேர வானத்தில் தெரியும் சில நட்சத்திரங்களை இணைத்துப் பார்த்தால், சில உருவங்கள் தென்படும். இதன் அடிப்படையிலேயே முன்னோர்கள் ஒரு சில விண்மீன் கூட்டங்களுக்குப் பெயரிட்டுள்ளனர். அவற்றில் ஒன்று தான் 'வேட்டைக்காரன்' எனப்படும் ஓரியன் நட்சத்திரத் தொகுதி. 'ஓரியன்' என்னும் கிரேக்கச் சொல்லுக்கு 'வேட்டைக் காரன்' எனப் பொருள்.

இந்தத் தொகுதியில் ஏழு நட்சத்திரங்கள் முதன்மையாக உள்ளன. தவிர, 81 போயர் நட்சத்திரங்கள் உள்ளனவாம். 'ஜனவரி மாதம் இரவு 9 மணியளவில் இந்த ஓரியன் நட்சத்திரத் தொகுதியைத் தெளிவாகப் பார்க்க முடியும்' என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

அரோரா

கவனித்துப் படியுங்கள்; அரோகரா அல்ல. இது, விண்ணில் தோன்றுகின்ற வண்ண ஒளிக் கற்றை. இவை பெரும்பாலும் இரவு நேரங்களில்தான் தோன்றுகின்றன. குறிப்பாக, துருவப் பகுதிகளில் அதிகம். வடதுருவத்தில் தோன்றுபவை 'அரோரா போராலிஸ்', தென் துருவத்தில் தோன்றுபவை 'அரோரா அஸ்ட்ராலிஸ்'.

அதென்ன அரோரா? ரோமர்களி விடியலுக்கான பெண் கடவுள் அரோரா கிரேக்கர்கள் வடக்கிலிருந்து வீசும் காற் 'போரியஸ்' என்கின்றனர். இ இணைந்த சொல்லே 'அரோரா போராலிஸ் 'அஸ்ட்ராலிஸ்' என்பது இலத்தீன் மொழி சொல். இது, தெற்குப் பகுதி என பொருள்படும். இதன் மூலம் பிறந்த சொ 'அரோரா அஸ்ட்ராலிஸ்'.

பொதுவாக இந்த அரோராக்கள் பச் அல்லது வெளிர் சிவப்பு நிறத்துட விண்ணில் ஒளிர்பவை.

அரோராக்கள் தோன்ற, சூரியனிலிருந் புறப்பட்டு வருகின்ற மின்னூட்டம் பெற் துகள்கள் தான் காரணம். இவை பூமிக் மேலாகச் சுமார் 80 கிலோ மீட்டர் தூரத்



அடையும்போது ஒளிரத் தொடங்குகின்றன. அவற்றிலிருந்து ஆக்சிஜன் வெளியேறும் போது பச்சை அல்லது பிரௌன் கலந்த சிவப்பு நிறம். நைட்ரஜன் வெளியேறுகின்ற போது நீலம் அல்லது சிவப்பு நிறம் தோன்றுகிறது' என்கிறது அறிவியல். அட, வாணம் விடாமலே, வானில் கலர்ட்ரீட்!



• ஓரியன்

முனைவர் ஆ.சுரா

புருட்டோவுக்கு நாக் அவுட்!

மொத்த கோள்கள் ஒன்பது என்று சொன்னால், இனி மேல் மதிப்பெண் கிடைக்காது. ஏன் தெரியுமா? 2006ஆம் ஆண்டு



• வெனிஷியா புருனே

• புளூட்டோ

'செக்கோஸ்லோவாக்யா'வில் நடை பெற்ற சர்வதேச வானியல் நிபுணர்கள் மாநாட்டில், 75 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2500 விஞ் ஞானிகள் சேர்ந்து புளூட்டோவை நாக் அவுட் பண்ணிட்டாங்க. ஏன் தெரியுமா?

"தனக்கென்று ஒரு சுற்று வட்டப்பாதை இல்லாமல், நெப்டியூன் கோளின் சுற்று வளையத்துக்குள் சுற்றி வருவதால் தனிக் கோள் என்னும் தகுதியை புளூட்டோ இழந்துவிட்டது" என்கிறார்கள் விஞ்ஞானி கள்! இந்தக் கோளுக்கு 'புளூட்டோ'ன்னு பேர் வைக்கச் சொன்னது, இங்கிலாந்தைச் சேர்ந்த பதினொரு வயது பள்ளி மாணவி 'வெனிஷியா புருனே'. ●

அலர்ஜி ஆகும் உணவுகள்!



உடல் நலனைக் காப்பதில் உணவுக்கு நிறையப் பங்கு உண்டு என்பதை அறிவீர்கள். அதே நேரத்தில் உடலுக்கு ஒவ்வாத உணவுகளைச் சாப்பிட்டால், அவை ஒவ்வாமை நோய்களை உண்டாக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அண்மைக்காலமாக, உணவினால் ஏற்படும் அலர்ஜி நோய்கள் குழந்தைகளிடம் அதிகரித்து வருகின்றன. காரணம், கடந்த இருபதாண்டுகளில் உணவுத் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய புரட்சி என்றுதான் கூறவேண்டும். இந்தப் புரட்சிக்கு அடிப்படையாக இருப்பது, உணவில் சேர்க்கப்படும் செயற்கை நிறமும் மணமும் தான்.

குழந்தைகள் இந்த நிறத்திற்கும் மணத்துக்கும் எளிதாக அடிமையாகிவிடுகிறார்கள். இதனால் சாக்லேட், மிட்டாய், ஐஸ்கிரீம், ஜெல்லி போன்றவற்றின் நிறத்தைப் பார்த்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அந்த நிறத்தைத் தருகின்ற செயற்கை வேதிப்பொருள்கள் ஒவ்வாமைப் பொருள்களாகச் செயல்பட்டு, அவர்களுக்கு அலர்ஜி நோய்களை உண்டாக்குகின்றன.

அலர்ஜியின் அறிகுறிகள்

ஒவ்வாத உணவைச் சாப்பிட்டதும் குமட்டல், வாந்தி, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, வயிற்று உப்புசம், அஜீரண போன்ற தொல்லைகள் ஏற்படும். சிலருக்குத் தோலில் அரிப்பு, தடிப்பு வெளி படும். இவை தவிர, உதடு வீங்குத கண் இமைகள், காது, தொண்டை போன் இடங்களில் வீக்கம் ஏற்படுதல், சுவாசிக் சிரமம் உண்டாவது, ஆஸ்துமா போன் அறிகுறிகள் தெரியும். இன்னும் சிலருக்கு தாங்க முடியாத தலைவலி உண்டாகு

அலர்ஜி எப்படி உண்டாகிறது?

உணவுச் செ மானப்பாதையி உள்ள செல்களி 'மாஸ்ட் செல்கள்' எ னும் சிறப்பு செல்க உள்ளன. இவை நோய்ப் பாதுகாப்புக் உதவுகின்றன. இவை உடலுக்கு ஒவ்வா வற்றை எதிர்த்து போராடும் குணமு ளவை. இதனால்தா ஒவ்வாத உணவுகள் செ மானப் பாதைக்குச் சென் வுடன், இந்த மாஸ்ட் செ களிலிருந்து எதிர்ப்பொரு கள் கிளம்பி ஒவ்வாத உணவுகளை சிதைக்கின்றன. அப்போது மாஸ்ட் செல்க வெடித்து 'ஹிஸ்டமின்' எனும் ஒரு வேதி பொருளை வெளியிடுகின்றன. இதுதா அரிப்பு, தடிப்பு, குமட்டல், வாந்தி போன் ஒவ்வாமை அறிகுறிகளை உண்டாக் கின்றது.

பொதுவான அலர்ஜி உணவுகள்

முட்டை, பசும்பால், கெட்டித்தயிர், கட மீன்கள், கருவாடு, கோழி, ஆடு இவற்றி

டாக்டர் கு.கணேசன்


இறைச்சி, தக்காளி, கத்தரிக்காய், கோதுமை, மக்காச்சோளம், உருளைக் கிழங்கு, முந்திரி, ஆரஞ்சு, ஆப்பிள், எலுமிச்சை, சாத்துக்குடி, ார்த்தம்பழம், வாழைப்பழம், பட்டாணி, ாதாம், பயறு, சோயாபீன்ஸ், சாக்லெட்டில் ள்ள கோகோ, ரொட்டியில் உள்ள ஈஸ்ட், ர்பத், கலர் சோடா போன்றவை சிலருக்கு இயல்பிலேயே அலர்ஜி ஏற்படுத்தக்கூடிய உணவுகள். இவற்றை செயற்கை நிறங்கள் அல்லது வேதிப் பொருட்கள் கலப்பின்றிச் ாதாரண சமையலில் சாப்பிட்டால்கூட அந்தச் சில நபர்களுக்கு ஒவ்வாமை அறி றிகள் தோன்றுவதுண்டு.

செயற்கை நிறங்கள் ஆபத்து!

உணவுப் பொருள்களுக்குக் கவர்ச்சி யான நிறத்தைக் கொடுப்பதற்கும், அவை ீண்ட நேரம் கெடாமல் இருப்பதற்கும் 'அசோ சாயங்கள்' சேர்க்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஜாம், சாஸ், கெச்சப் போன்ற உணவுகளிலும், அன்னாசி, மாம்பழம், செர்ரி போன்ற செயற்கைப் பழச்சாறுகளிலும், சில மென்பானங்களிலும் 'டார்ட்டசின்', 'எரித்ரோசின்', 'கார்மோசின்' முதலிய சாயங்கள் சேர்க்கப் படுகின்றன. இவை உடலில் அலர்ஜிக் கேடுகளை உண்டாக்குவதுடன், தொடர்ந்து பயன்படுத்துவதால் புற்று நோய் உண் டாக்குவதிலும் முன்னணியில் உள்ளன.

அலர்ஜி ஆகும் பலகாரங்கள்!

லட்டு, அல்வா, ஜாங்கிரி, கேக், கேசரி போன்ற இனிப்புவகைகளிலும், பஜ்ஜி, போண்டா போன்ற காரவகைகளிலும், கோழி பிரியாணியிலும் பல வடநாட்டு இறைச்சி வகைகளிலும், கவர்ச்சியான நிறம் கொடுப்பதற்காக காரீய ஆக்சைடு மற்றும் 'கோல்தார் சாயங்களை'க் கலந்து



விடுகிறார்கள். இந்த வேதிப்பொருள்கள் பலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. அலர்ஜி குணங்களைக் காட்டிவிடுகின்றன. மேலும், குடல் கட்டிகள் உருவாக இவை காரண மாகின்றன.

மணத்தில் மயங்காதே!

சாக்லெட், ஐஸ்கிரீம், கேக், ரொட்டி, கஸ்டர்ட் புட்டிங்க்ஸ் போன்றவற்றில் செயற்கை மணம் தருவதற்காக 'வெனிலா எசன்ஸ்' சேர்க்கப்படுகிறது. பல வகை இனிப்புகளில் அழகுக்காக செயற்கை குங்குமப்பூ சேர்க்கப்படுகிறது. இவை ஏற்கனவே சொன்ன அலர்ஜி குணங்களை ஏற்படுத்தக் கூடியவையே.

தலைவலியா, யோசியுங்கள்!

அசைவ உணவுகள் பலவற்றில் ருசிக் காகவும், மணத்திற்காகவும் 'அஜினோ மோட்டோ' எனும் உப்பு சேர்க்கப்படுகிறது. இதிலுள்ள 'மோனோ சோடியம் குளு டோமேட்' எனும் வேதிப்பொருள் தாங்க முடியாத தலைவலியை உண்டாக்கக் கூடி யது. காலப்போக்கில் இது ரத்தக் கொதிப்பு நோயைத் தரக்கூடிய ஆபத்து நிறைந்தது

கடல் மீன்கள் கவனம்!

குளத்து மீன்களைவிட கடல் மீ உணவுகள் ஆபத்து மிகுந்தவை. அலர் நோய்களை ஏற்படுத்தக் கூடியவை. குறி பாக, கடல் இறால் மீன்களில் 'டைரமி எனும் வேதிப்பொருள் இயற்கையாகவே அதிகமாக இருக்கும். இந்த மீன்களை அடிக்கடி சாப்பிட்டால் ஒருபக்கத் தலை வலி வரும். காரணம், அதிலுள்ள டைரமி குடலுக்குச் சென்றதும் அது சிதைக்கப்ப வேண்டும். அதற்கு ஒரு என்சைம் தேவை சிலருக்கு இந்த என்சைம் அளவு மிக குறைவாக இருக்கும். அத்தகையவ களுக்கு இவ்வகை மீன் உணவா ஒருபக்கத் தலைவலி வரும்.

எனவே, ருசியை நாடிச் சாப்பிடச் செ லும் முன், நம் ஆரோக்கியத்தை எண்ண எச்சரிக்கை கொள்ள வேண்டும். இதி கவனமாயிருந்தால் போதும்; ஒவ்வ மைக்கு டாட்டா காட்டிவிடலாம்.



வாழ்த்துகள்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 30ல் கலந்து கொண் சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தன ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூல பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1) கடல் கிளிகள், 2) தில்ரஸ்பானு, 3) முதலாம் கும குப்தர், 4) பிக்மி மார்மோஸ்ட், 5) திவேஹி

பரிசு பெறுவோர் :

1.பா.ஹேமாஸ்ரீ, திருவண்ணாமலை, 2.எஸ்.ஸ்ரீவாணி, திருச்சி, 3.ஜெ.ஹரீஷ்குமா ஈரோடு, 4.த.அகிலன், மதுரை, 5.வி.வினோத், சேலம், 6.கே.சுனில்குமார், விழுப்புர 7.ஆ.ரவிசங்கர், ஈரோடு, 8.என்.அஞ்சனா, கும்பகோணம், 9.ஏ.சின்னசாமி, தர்மபு 10.வ.ர.முகம்மது சபி, தூத்துக்குடி

உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராக குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.



● ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.

● பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

'பாடங்களைக் கருத்தூன்றிப் பயில்வது முக்கியம். ஆனால், அது மட்டும் போதாது. அறிவை வளர்க்கக்கூடிய நல்ல புத்தகங்களைத் தேடிப் படிக்க வேண்டும். பல்வேறு கலைகளையும் ஆர்வமுடன் கற்க வேண்டும். அதனால் உங்கள் மனவளம் கூடும்; அறிவு விரிவடையும். அதனால்தான் - நம் பள்ளியில், மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது சனிக்கிழமை தினங்கள், உங்கள் தனித்திறனை வளர்க்கும் நாட்களாக அமைக்கப்பட்டுள்ளன. பள்ளியில் இப்போது படிக்கும் கல்வி தான், தேர்வில் நீங்கள் வெற்றி பெற உதவக்கூடியது. என்றாலும், எதிர்காலத்தில் நீங்கள் பெரும் சாதனையாளர்களாகத் திகழ வேண்டுமானால், உங்களின் தனித்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான், வெற்றியாளர்களாக விளங்க முடியும்.''

- ஈரோடு மாவட்டம் நம்பியூரில் உள்ள காமராஜ் மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் என்.கே. கருப்பசாமி பேசி முடித்ததும், வரிசையாய் அமர்ந்திருந்த மாணவர்கள் கரவொலி எழுப்பினர்.

கடந்த ஆண்டு கோகுலம் இதழில் இடம்பெற்ற படைப்புகளில், நம்பியூர் காமராஜ் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் பங்களிப்புதான் அதிகம். அதன் பொருட்டு, கோகுலம் சுழற்கோப்பையை வழங்கச் சென்றிருந்தபோது நடைபெற்றது இந்த நிகழ்வு.

இந்தப் பள்ளியின் இருபத்தைந்து மாணவர்கள் எழுதிய படைப்புகள், கடந்த ஆண்டு கோகுலத்தில் இடம் பெற்றிருந்தன. கதைகள், கவிதைகள், ஓவியங்கள், துணுக்குகள், ஜோக்ஸ், விடுகதை, சம்பவம்... என்று கோகுலத்தில் இடம் பெறும் பல்வேறு பகுதிகளிலும் இந்த மாணவர்களின் படைப்புகள் இடம் பெற்றிருந்தன.

இந்த இருபத்தைந்து பேரில், வேல் முருகன் மற்றும் தனசேகர் ஆகிய இருவரின் படைப்புகள் அதிக அளவில் இடம் பெற்றிருந்தன. (இந்த மாத இதழின் முகப்பில் இடம் பெற்றிருப்பவர்கள் அவ்விரு மாணவர்கள்தான்!)



✱ ஆசிரியர்களுடன் படைப்பாளிகள்

எப்படி இவ்வளவு மாணவர்கள் ஒரு பள்ளியிலிருந்து எழுதுகிறார்கள்: வரைகிறார்கள் என்று தோன்றினால், அதற்கு பதிலளிப்பது போலத் துலங்கின மாணவர்களின் வார்த்தைகள் :

'எங்கள் ஆசிரியர்கள் எங்களை அழைத்து ஊக்கப்படுத்துகிறார்கள். எங்

மீண்டும் நம்பியூர்!

ராகவன்

களை மேலும் மேலும் செய்யச் சொல்லி உற்சாகம் தருகிறார்கள். அவர்கள் தருகின்ற ஊக்கம்தான் எங்கள் நம்பிக்கையை வளர்க்



✱ என்.கே.கருப்பசாமி



✱தாளாளருடன்...

கிறது. கோகுலத்தில் அடுத்தடுத்து இவ்வளவு படைப்புகள் வெளிவந்தன என்று சொன்னால், அதற்கு முழுக்க முழுக்க எங்கள் பள்ளியின் தாளாளரும், ஆசிரியர்களும்தான் காரணம். எங்களால் முடியும் என்பதே அவர்கள் சொல்லித்தான் எங்களுக்குப் புரிந்தது. சுழற்கோப்பை மீண்டும் எங்கள் பள்ளிக்குக் கிடைத்திருக்கிறது என்றால், அதற்கான சிறப்புகள் அனைத்தும் எங்கள் ஆசிரியர்களையே சேரும்...''

ஒரு குரலாக வெளிப்படுகின்றன வார்த்தைகள்! உண்மைதான்.

தனியொருவர் மட்டுமே இதைச் சாதித்துவிட முடியாது. வகுப்பாசிரியர் முதல் தலைமையாசிரியர் வரை ஒவ்வொருவரும் இந்த விஷயத்தில் அக்கறை கொண்டிருந்தால் மட்டுமே இது சாத்தியமாகியிருக்க முடியும்.

''கோகுலத்துக்கு ஒரு துணுக்கு எழுதி அனுப்பேன்' என்றார் ஆசிரியர். அதற்காக புத்தகம் படிக்கும்போதுதான் நிறைய புதிய செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தது. நான்கு வரி எழுத நாற்பது பக்கம் படிப்பது அவசியம் என்கிற விஷயத்தை அப்போதுதான் நானும் அறிந்து கொண்டேன்'' என்றார் ஒரு மாணவர். மாணவர்களை இப்படியெல்லாம் செயல்படத் தூண்டும் அற்புதமான பணியைச் செய்யும் ஆசிரியர்களின் ஈடுபாடு உண்மையிலேயே பாராட்டுக்குரியது.


அட்டை, வண்ணப்படங்கள் : ஸ்ரீஹரி



* ஸ்விப்ட்



* தையற்காரப் பறவைக் குஞ்சுகள்



* மைனா வீடு

கிராமப் பகுதிகளுக்குச் சென்றால், உயரமான தென்னை மற்றும் பனை மரங்களின் உச்சியில், காற்றிலாடும் தூக்கணாங்குருவியின் கூடுகளைப் பார்க்கலாம். சில கூடுகள் முழுமையாகவும், சில அரைகுறையாகவும் இருக்கும். இந்தக் கூடுகளைக் கட்டுபவை ஆண் குருவிகள்! வைக்கோல், இலை, நார் என்று கொண்டு கட்டப்படும் இந்தக் கூட்டின் வாசல், அடிப்பக்கத்தில் இருக்கும். வெளிப்புறம் கரடுமுரடாக இருந்தாலும், உள் பக்கம் மெத்தென்று அமைக்கப்பட்டிருக்கும்.

நமக்கு வீடு கட்ட, செங்கல், இரும்பு, மரம், சிமெண்ட் என்று எவ்வளவோ தேவைப்படுகின்றன. ஆனால், நம்மை விட, அழகான நேர்த்தியான விதவிதமான கூடுகளைக் கட்டுவதில் பறவைகள் ஆச்சரியப்படுத்துகின்றன. எதற்காகக் கூடுகள்? முட்டையிடவும், குஞ்சுகளைப் பராமரிக்கவும் கட்டப்படுகின்றன இந்தக் கூடுகள்!

சூரியப் பறவை, பூக்குருவி ஆகியனவும் தங்கள் கூடுகளை மரங்களில் தொங்குமாறு அமைக்கின்றன. ஒரு கிளையின் நுனியில், சிறிய பை போன்ற அமைப்பில் தொங்கும் கூடுகள். அவற்றினுள் நுழைய கதவு போன்ற சிறு அமைப்பும் இருக்கும்.

தையற்கார பறவை, ராபின் ஆகியவை புனல் உருவக் கூடுகளை அமைக்கும். இவற்றில் சில வகைப் பறவைகள், பணப்பை போன்ற அமைப்பில் தம் கூடுகளை புற்களிலும் புதர்களிலும் தொங்க வைக்கும்.

'ஸ்விப்ட்' எனும் பறவை கூட்டினை மலைக் குகைகளில் அல்லது பொந்துகளில் அமைக்கும். அதை ஒரு கிண்ணம் போன்ற உருவில், வைக்கோல், இறகு, உமிழ் நீர் ஆகியவற்றைக் குழைத்துச் சேர்த்து உருவாக்கும்.

ஆந்தை - மைனா - மரங்கொத்தி ஆகியவை, தங்கள் கூடுகளை மரப்பொந்துகளில் அமைக்கும். அந்தப் பொந்துகள் இயல்பாக அமைந்தவை அல்லது மக்கிய மரங்களில் உருவாக்கப்பட்டவை. இந்தப் பறவைகள் மிருதுவான தழைகளைக் கொண்டு, பொந்துகளில் மெத்தை போல் அமைத்து முட்டையிடும்.

கஸ்தூரா - சாம்பற் பறவை, மார்டின் போன்ற பறவைகள் குளக்கரையில் இருந்து ஈரமான களிமண் எடுத்து, தம் உமிழ் நீரின் உதவியால் கூடு கட்டுகின்றன. தங்களின் அலகால் குழி தோண்டி, மண்

கட்டுரை

பறவை வீடு!



* 'ராபின்' கூடு



* கூட்டில் கழுகு



* தூக்கணாங்குருவிக் கூடு

எடுத்து அவற்றில் தம் நகங்களால் ஒரு வாய்க்கால் தோண்டி அதன் இறுதி நீர் பரப்பு ஒன்றில் முடியுமாறு அமைத்து கூடு கட்டுபவை ஹீப் எனும் பறவை வகை. இந்த குழாய்க் கூடு பல அடி நீளம் இருக்கும்.

'குவெல்', 'டேர்ன்' போன்ற பறவைகள் தரையிலேயே புல், இலை இவற்றைப் பரப்பி கிழிந்த துணி வைக்கோல் பழத் தோல்கள் ஆகியவற்றைக் கொண்டு தம் கூட்டினை அமைக்கும். வீடுகளின் மேற்கூரை, மரங்கள் இவற்றில் இலை, வைக்கோல், புல் போன்றவற்றைக் கொண்டு சிட்டுக் குருவி தன் கூட்டை அமைக்கும்.

தூக்கணாங்குருவி பற்றிய ஒரு சுவாரஸ்யத் தகவலுடன் முடிக்கலாம். அரையாகுறையாக மரங்களில் கூடுகள் காணப்படக் காரணம் என்ன தெரியுமா? ஆண் குருவி கட்டிய கூட்டைப் பெண் குருவி பார்வையிட்டு, சோதனை நடத்துமாம்! 'சரியில்லை' என்று அது சொல்லிவிட்டால், புதிதாக வேறொரு கூட்டை கட்டுமாம் ஆண் குருவி! அதனால் அரைகுறை கூடுகள், பெண் குருவி 'ஓகே சொல்லாதவை' என்கிறார்கள்!

- ம.விவேக், குட்டம்



* சிட்டுக்குருவி

கோட்டைக் கதவுகள் உடைபட்டன. பெருங்கூச்சலுடன் உள்ளே நுழைந்த ரோமானியப் படை வீரர்கள் கண்ணில் படுகிறவர்களையெல்லாம் ஆத்திரத்தோடு அடித்து வீழ்த்தினர்.

பின்னே? இந்த நாளுக்காக அவர்கள் எத்தனை மாதமாகக் காத்திருக்கிறார்கள்! அத்தனைக் கோபமும் ரோமானியர்களுடைய முகங்களில் 'பளிச்'சென்று தெரிந்தது.

ஆரம்பத்தில் இந்தப் போரை அவர்கள் ஒரு பெரிய விஷயமாகவே நினைக்கவில்லை.

வழக்கம்போல் போகிறோம், தாக்குகிறோம், ஜெயிக்கிறோம், கொள்ளையடிக்கிறோம், திரும்ப வருகிறோம் என்றுதான் நினைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

ஆனால் இங்கே, நிலைமை தலைகீழாக இருந்தது. சைரகஸ் நகரத்தின் படைகள் அவர்களைத் தைரியமாக எதிர்த்துத் தாக்கின. ரோமானியர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அந்தப் பிரம்மாண்டமான கோட்டையைத் தாண்டி உள்ளே போகமுடியவில்லை.

ரோமானியர்களின் தளபதி பெயர் மார்செலஸ். அவரும் சைரகஸை ஜெயிப்பதற்காக, கோட்டையை முற்றுகை



அரை வினாடி ஆத்திரம்!

என்.சொக்கன்

இடுவதுவரை எத்தனையோ புதுமையான போர் நுணுக்கங்களை முயற்சி செய்து பார்த்துவிட்டார்.

மார்செலஸ் நினைத்தது நடக்கவில்லை. ஒன்றரை வருடம் ஆகியும் சைரகஸ் மக்கள் சரண் அடையவில்லை. ரோமானியப் படை வீரர்கள் காத்திருந்து காத்திருந்து வெறுத்துப்போனார்கள்.

அது மட்டுமில்லை. இந்தக் கால கட்டத்தில் சைரகஸ் படைகள் தொடர்ந்து ரோமானியர்களைத் தாக்கிக்கொண் டிருந்தன. அதுவும் புதுமையான ஆயு தங்களால், மிகவும் விநோதமான போர்முறைகளால். இந்தத் திடீர் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் திணறினார் மார்செலஸ்.



''இவங்களுக்கு மட்டும் இப் படிப் புதுப்புது ஆயுதங்கள் எங்கிருந்து கிடைக்குது?'' விசா ரித்தபோது எல்லோரும் ஒரே ஒரு பெயரைச் சொன்னார்கள், 'ஆர்க்கிமிடிஸ்.'

ஆர்க்கிமிடிஸைத் தெரி யுமா? பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தபோது தொட்டி யிலிருந்து தண்ணீர் வழி வதைப் பார்த்து ஒரு மிகப் பெரிய அறிவியல் உண்மையைக் கண்டறிந்தவர். அப்படியே எழுந்து ஓடிய அதே 'யுரேகா' ஆர்க்கிமிடிஸ்தான்!



* ஆர்க்கிமிடிஸ்

அந்த ஆர்க்கிமிடிஸ் சைரகஸ் நகரில் வசித்துக்கொண்டிருந்தார். ரோமானியர் களின் தாக்குதலைச் சமாளிப்பதற்காகப் பல வித்தியாசமான ஆயுதங்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தார். இதை அறிந்த மார்செலஸ் அசந்துபோனார். 'அவர் நிஜமாகவே ரொம்பப் புத்தி சாலிதான்!' என்று பாராட்டினார்.

''என்னங்க? எதிரிப்படையைச் சேர்ந்த ஒருத்தரை இப்படிப் புகழறீங்க? அவராலதானே நாம இந்தப் போர்ல ஜெயிக்கமுடியாம தாமதமாகுது?''

''அவர் எந்தக் கட்சியா இருந்தா

என்ன? அறிவியல் எல்லோருக்கும் பொதுவானது. அந்த அறிவியலைப் பயன்படுத்தி நல்ல விஷயங்களை யார் கண்டுபிடிச்சாலும் ஏத்துக்கணும், அவங்க திறமையை மதிக்கணும்,'' என்றார் மார்செலஸ்,

அவர் பொறுமையோடு எதிர்த்து நின்றார். கடைசியாக, ஜெயித்துவிட்டார். இந்த நிலையில்தான், ரோமானிய வீரர்கள் சைரகஸ் தெருக்களில் இஷ்டப்படி ஓடினார்கள். அகப்பட்ட பொருள்களையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டார்கள். எதிர்த்தவர்களை வீழ்த்தினார்கள்.

அப்போது, மார்செலஸ் வீரர்களை அழைத்தார், ''அந்த ஆர்க்கிமிடிஸ் எங்கே இருக்கார்? அவரை முதல்ல கண்டுபிடிங்க, அப்புறம் ...''

அவர் பேசி முடிப்பதற்குள் ஒரு வீரன் ஆவேசமாகக் கத்தினான், ''அந்தாளை அங்கயே கொன்னுட்டோம்.''

''கூடாது'' அவசரமாக அலறினார் மார்செலஸ், ''அவர் மிகப்பெரிய மேதை. அவரோட அறிவியல் ஞானத்தை, திறமையை நமக்குச் சாதகமாப் பயன்படுத்திக்கணும். புரியுதா?''

தளபதியின் கட்டளையை வேண்டா வெறுப்பாக ஏற்று தலையாட்டினார்கள் வீரர்கள்.

அதேசமயம், சைரகஸின் இன்னொரு மூலையில் ஆர்க்கிமிடிஸ் அமைதியாக உட்கார்ந்திருந்தார். சுற்றிலும் நடக்கிற களேபரங்கள் எவையும் அவரைப் பாதிக்கவில்லை. தீவிரமாக யோசித்தபடி தரையில் படம் வரைந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

ஒரு ரோமானியப் போர் வீரன் அவரை நெருங்கினான், ''ஏய், நீ யாரு?''.

ஆர்க்கிமிடிஸ் பதில் சொல்லவில்லை. நிமிர்ந்து பார்க்கவில்லை. ''நான் கொஞ்சம் வேலையா இருக்கேன், என்னைத் தொந்தரவு செய்யாதே, அந்தப் பக்கம் போ!'' என்றார்.

அந்த வீரனுக்கு ஆத்திரம். சட்டென்று கத்தியை உருவி ஆர்க்கிமிடிஸ்மீது பாய்ச்சினான். அந்த அறிவியல் மேதையின் வாழ்க்கை அதோடு முடிந்தது.

இந்தத் தகவல் மார்செலஸுக்குத் தெரிய, அவர் துடித்துப் போனார். ''இப்படியொரு அறிவாளியைப் பெற இனி எவ்வளவு காலம் ஆகுமோ? ஒரு முட்டாளின் அரை வினாடி ஆத்திரம் அவரைக் கொன்றுவிட்டதே'' என வருந்தினார்.

அன்றும் சரி; இன்றும் சரி. ஆர்க்கிமிடிஸ் போன்ற மகா மேதைகளின் தோள் மீது ஏறி நின்றுதான், நாம் இப்போது உலகத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம்●

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No.36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No.36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2010

Lakshmi Natarajan
Publisher



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது ணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' ன்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் ட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

வெற்றி அல்லது சாதனை புரிய என்ன வேண்டும்? பணம், வசதி, வாய்ப்பு. இப்படித்தான் பலரும் சொல்வோம். ஆனால், உண்மையான தேவை, தன்னம்பிக்கை அதற்கான தனித்த அடையாளம், ஹெலன் கெல்லர்!

அமெரிக்காவில் உள்ள அலபாமா என்ற மாநிலத்தில் 'டஸ்கம்பியா' (Tuscumbia) என்ற ஊரில் பிறந்தவர் ஹெலன் கெல்லர். இவருக்கு ஒன்றரை வயதானபோது மூளைக்காய்ச்சல் ஏற்பட்டது. அந்த நோய் ஹெலனின் பார்வையைப் பறித்ததோடு கேட்கும் சக்தியையும் இழக்க வைத்தது.



என்றாலும் கெல்லர் அசரவில்லை. ப்ரெய்லி முறையில் கற்க அரம்பித்தார். பிறகு, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'ராட்க்ளிஃப்' கல்லூரியில் சேர்ந்து படித்தார் ஹெலன். இரண்டாவது ஆண்டில் படித்தபோது 'என் கதை' என்ற தலைப்பில் சுயசரிதையை எழுதினார். இதைத் தொடர்ந்து 'நான் வாழும் உலகம் 'இருளிலிருந்து மீண்டேன்', 'நம்பிக்கை கொள்வோம்'.. என்று பத்துக்கு மேற்பட்ட நூல்களையும் எழுதினார்.

பார்வைத் திறன் மற்றும் கேட்கும் திறனற்ற ஒருவர் பெற்ற முதல் இளங்கலைப் பட்டம் என்றால், அது ஹெலன் கெல்லர் பெற்றதுதான். தனக்கு இருந்த குறையைப் பற்றி ஹெலன் கெல்லருக்குச் சிறிதும் கவலை ஏற்பட்டது இல்லை. அதே சமயம், மற்றவர்களின் துன்பத்தையும் வேதனைகளையும் அறிந்து, அவர்களுக்காக உதவி புரிந்தார்.

பார்வைக் குறைபாடு, ஆரோக்கியம், சத்துணவு தொடர்பான ஓர் ஆய்வமைப்பையும் நிறுவினார் ஹெலன்.

உன்னதமான அழகு!

ஹெலனின் அறிவாற்றலைக் கண்டு வியந்த விக்டோரியா மகாராணியார், ஒரு கப்பலுக்கு ஹெலனின் பெயரைச் சூட்டி கௌரவித்தார். 1964ஆம் ஆண்டு அமெரிக்க அதிபராக இருந்த லிண்டன் ஜான்சன், ஹெலன் கெல்லருக்குச் சிறப்பு விருதளித்துக் கௌரவித்தார்.

'சலிப்பில்லாமல் போராடப் பழகிக் கொண்டால் வாழ்க்கையில் அனைவரும் சுலபமாக வெற்றி அடைந்துவிடலாம்' என்றார் ஜூன் 1, 1968ல் மறைந்த ஹெலன் கெல்லர்.

தங்கள் மாநிலத்தில் பிறந்த பெண் என்பதால் அலபாமா மாநில எல்லையில் அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறது. ஹெலன் கெல்லரின் சிலை

தன்னம்பிக்கை



* இளங்கலைப் பட்டம் பெற்ற நிலையில்...

த.சி.பாலு, சென்னை



அமெரிக்காவில் உள்ள National Statutory Hall Collection-ல் நிறுவப்பட்டுள்ளது. அதன்கீழே உள்ள பீடத்தில் எழுதப்பட்டுள்ள வாசகம் :

"உலகின் உன்னதமான அழகுகள் எல்லாம், மனத்தால் மட்டுமே உணரக் கூடியவை; காண்பதாலோ தொடுவதாலோ அல்ல!" - அட, ஹெலன் கெல்லருக்கே பொருந்தக்கூடிய வார்த்தைகள்!

பயிற்சி



புதிய பகுதி

வரைந்து பாருங்கள்!

வழங்குபவர் : என். வஜ்ரவேலு

பெயர்க்காரணம்

வணிகர் மரம்!

W. நடராஜன், புள்ளமங்கலம்



ஆலமரம் இந்தியா, சுமத்ரா, ஜாவா ஆகிய பகுதிகளைத் தாயகமாகக் கொண்டது. Ficus benghalensis என்னும் தாவரவியல் பெயரால் குறிப்பிடப்படுவது. இந்த மரத்தின் பழங்களை உண்ணும் பறவைகளின் எச்சத்தால், இது பரவுகிறது...

உலகின் மிகப் பெரிய ஆலமரம் கொல்கத்தாவின் தாவரவியல் பூங்காவில் உள்ளது. மேற்புறம் விரிந்த தழைப்பகுதியின் சுற்றளவு இருநூற்றி எண்பத்தைந்து மீட்டர். வேரூன்றிய விழுதுகள் மட்டும் நானூற்றி அறுபத்து நான்கு! மரம் அமைந்திருக்கும் மொத்த நிலப்பரப்பு ஒன்றரை ஏக்கர் உயரம் இருபத்தைந்து மீட்டர். இந்த மரத்தின் கீழ் ஏழாயிரம் மக்கள் உட்காரலாம் என்கிறார்கள்.

சரி; Banyan என்ற ஆங்கிலச் சொல்லின், வேர்ச்சொல் Banya. இது குஜராத்தி மொழிச் சொல். இதற்கு வியாபாரி அல்லது வணிகர் என்று பொருள். வாணிபம் செய்வதற்காக வந்த போர்ச்சுக்கிசீயர், ஆலமரத்தடியில் கடை வைத்திருந்த வணிகர்களை 'பனியா' என்று அழைத்தனர். அவர்கள் மூலம் ஆங்கில உருவாக்கம் பெற்ற சமயத்தில், வணிகர்களுக்குச் சொல்லப்பட்ட பெயர் மாற்றமடைந்து, மரத்தின் பெயராகிவிட்டது. அப்போ, வணிகர் மரம்!

தோட்டத்தில் 'கீச், கீச்' என்று கத்திக்கொண்டு தாவிக் குதிக்கும் அணில்களை நாம் அனைவருமே பார்த்து ரசித்திருப்போம். இவற்றில் வெள்ளை அணில், சாம்பல் அணில், கறுப்பு அணில், பிக்மி அணில் என்று பல இனங்கள் உண்டு.

இந்தியாவின் மேற்குமலைத் தொடர்ச்சி காடுகளில் காணப்படும் மலபார் ராட்சத அணில்கள், இவற்றில் மிகப் பெரிது என்கிறார்கள். Ratufa indica என்று சொல்லப்படும் இந்த அணிலின் வால்பகுதி பதினான்கு முதல் பதினாறு இன்ச் நீளம் வரை இருக்கும்! இதன் எடை இரண்டு கிலோவுக்கும் அதிகமானது. பளபளப்பான கருஞ்சிவப்பு நிறத்தில் இது காணப்படும்.

பழங்கள், கொட்டைகள் மற்றும் மரப்பட்டைகளை உணவாகக் கொள்ளும் இந்த அணில், ஆறு மீட்டர் தூரம் தாவக்கூடியது. மகாராஷ்டிர மாநிலத்தின் தேசிய விலங்காகக் கொண்டாடப்படும் இதை 'ஷிக்ரு' என்று செல்லமாக அழைப்பர். இதைப் போன்றே, பறக்கும் அணில் (Glaucomys sabrinus) என்று இன்னொரு வகை அணிலும் உண்டு. நெடுந்தூரம் தாவும் திறன் கொண்ட காரணத்தால், இதற்கு இப்பெயர்.

பொதுவாக, பயந்த சுபாவம் கொண்டவை என்று கருதப்படும் அணில், ஒரு சிறுமியைக் கடிக்கத் துரத்தியது என்றால் ஆச்சர்யமாகத்தான் இருக்கும். அப்படியொரு நிகழ்ச்சி ஜெர்மனியில் நடந்தது. அங்குள்ள க்ரும்பாக் (Krumbach) என்ற இடத்தில், லிசா ஃப்ரெம்மல் (Ilsa Fremmel) என்ற பத்து வயது சிறுமியைத் துரத்தித் துரத்தி காலைக் கடிக்க வந்தது ஓர் அணில்!

பயந்துபோன அந்தச் சிறுமி, அங்கிருந்த மிகப் பெரிய பைன் மரம் ஒன்றில் கடகடவென்று ஏறிவிட்டாள். அணில் விடாமல் துரத்தியது. முப்பதடி வரை மரத்தில் ஏறிவிட்ட சிறுமி, அதற்குமேல் ஏறப் பயந்து அலறினாள். அதைக் கேட்ட வழிப்போக்கர்கள், தீயணைப்புத் துறைக்குத் தகவல் தெரிவிக்க, அவர்கள் வந்து சிறுமியை மீட்டனர்.

'சிறுமியின் காலில் அணிந்திருந்த ஷூவை தனக்குப் போட்டியாகக் கருதி, அந்த அணில் துரத்தியிருக்கலாம்' என்று சொல்லப்பட்டது. அணில்கள் கூட்டமாகச் சேர்ந்து பயமுறுத்தும் என்றும் தெரிகிறது. குறிப்பாக, ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள பிக்மி அணில் (pygmy squirrel) உருவத்தில் சிறியது. ஆனால் கூட்டமாகச் சேர்ந்து பயமுறுத்தும் தன்மை கொண்டது. உலகின் மிகச் சிறிய அணில் என்று சொல்லப்படும் இந்த அணியின் மொத்த நீளமே பதின்மூன்று சென்டிமீட்டர்தான். வெளிர் சாம்பல் மற்றும் சிவப்பு நிற ரோமங்களைக் கொண்டு விளங்கும் இந்த பிக்மி அணில், (Myosciurus Pumilio), அழிந்து வரும் உயிரினங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது. ராமர் பாலம் கட்ட உதவிய அணில் என்று சொல்லப்படும் இந்த அணில் இனத்தைப் பாதுகாக்க வேண்டியதும் நம் கடமையல்லவா?

எஸ்.தங்கம். உறுப்பினர் எண் : 287. கமலாவதி மே.நி.பள்ளி, சாகுபுரம்



மலபார் அணில்

வெள்ளை அணில்

பிக்மி அணில்

சாம்பல்நிற அணில்

மிரட்டும் அணில்!

பயந்த சிங்கம்

ஜி.எஸ்.சபரி
உ.எண்:1475
படம்: பிள்ளை




இந்த டைஜஸ்டில்...



தந்தம் என்று சொன்னவுடன், நமக்கு யானைதான் நினைவுக்கு வரும். அதிலும் மிக நீண்ட வளைந்த தந்தங்களோடு காட்சி தரும் மிகப் பெரிய ஆப்பிரிக்க யானைகளின் தோற்றம் நினைவுக்கு வரும். ஆனால், மீன் குடும்பத்தைச் சேர்ந்த திமிங்கிலத்துக்குத் தந்தமுண்டு என்றால், வியப்பாக இருக்கிறதில்லையா? அப்படி தந்தத்துடன் காட்சி தரும் திமிங்கிலம், நார்வால் (Narwhal).

திமிங்கில இனத்தில், வெள்ளைத் திமிங்கிலத்தில் ஒரு வகையைச் சேர்ந்தது நார்வால் (monodon monoceros). இது ஆர்டிக் கடல் பகுதியில் அதிகமாகக் காணப்படும். வெளிர் நிறத்தில் இருக்கும். டேனிஷ் மொழியில் 'நார்வால்' என்றால், 'பிணம்' என்று பொருள்! நார்வாலுக்குத் தந்தம் போன்ற நீண்ட பல் ஒன்று வாய்ப் பகுதியில் உண்டு. இது மூன்று மீட்டர் நீளமும், சுமார் பத்து கிலோ எடையும்



கொண்டது. நார்வாலின் உடல் ஏழு முதல் எட்டு மீட்டர் நீளம் உடையதாக இருக்கும். அதன் இடது பக்க வாய்ப் பகுதியில் இந்தப் பல் காணப்படும். ஆண் மீன்களுக்கு வாயின் இரண்டு பக்கங்களிலும் இந்தப் பல் இருக்கும். பெண் மீனுக்கு ஒரு பல்தான். அதுவே அபூர்வம். முன்பெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் ஆண் மீனின் கொம்புகள் பெண் மீனைக் கவர்வதற்காக அமைந்திருப்பதாக நினைத்தனர். ஆனால், சமீபத்தில் நடத்திய சில ஆய்வுகள், நார்வாலின் தந்தத்தில் லட்சக்கணக்கான மெல்லிய நரம்புகள் உள்ளன என்றும், இது கடல் நீரின் தட்ப வெப்ப நிலை மற்றும் உப்புத் தன்மையை அறிய உதவுகின்றது என்றும் கூறுகின்றன. நார்வாலின் கொம்புகள் உடைந்தால் மீண்டும் வளரமாட்டா. நார்வாலுக்கு இந்தக் கொம்பு வேட்டையாடுவதற்கும் உதவுகிறது.



அதோடு ஒரு வகை விஷ திரவத்தை, தந்தத்தின் வழியாக எதிரிகள் மீது பாய்ச்சுகிறது.

'நார்வால் தந்தம்' 90,000 டாலர் வரை விலைக்கு வாங்கப்படுவதாலும், இதன் உடல் பகுதிகள் மருந்துகளில் பயன்படுத்தப்படுவதாலும், இந்தத் திமிங்கிலம் பெருமளவில் வேட்டையாடப்பட்டது. அதனால், பல நாடுகள் இதை வேட்டையாடத் தடை விதித்துள்ளன. மிக விரைவில் அழியக்கூடிய உயிரினங்களில் ஒன்றாக, நார்வாலை பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN) அறிவித்துள்ளது.

- சு.தங்கம், உ. எண் 287,
எட்டாம் வகுப்பு, கமலாவதி
மேல்நிலைப் பள்ளி, சாகுபுரம்



மீனுக்கும் தந்தமுண்டு!



ஏ.அலர்மேல்வள்ளி,
எட்டாம் வகுப்பு, பொன்னையா
ராமஜெயம் மேல்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்



கே.பவித்ரா,
ஏழாம் வகுப்பு,
கஸ்தூரிபா காந்தி பாலிகா
வித்யாலயா, ஏற்காடு



சி.செல்வி,
ஆறாம் வகுப்பு,
கஸ்தூரிபா காந்தி
பாலிகா வித்யாலயா,
ஏற்காடு

உங்கள் கைவண்ணம்!



எம்.திலீப்குமார், எட்டாம் வகுப்பு,
கேந்திரிய வித்யாலயா, சென்னை




கே.எஸ்.யோகேஷ்வரன்,
எட்டாம் வகுப்பு,
உ. எண் 146, திருச்சி



ஜி.எஸ்.யாஷிகா,
ஆறாம் வகுப்பு, ஸ்ரீ இராமகிருஷ்ண
வித்யாலயா குருகுலம்,
உளுந்தூர்பேட்டை



எஸ்.மேரி ஜீனோ,
உ. எண் 1322,
பாலக்காடு



நீலப்

✱ உலகில் மிகப் பெரிய பூராண் இனம் தென் அமெரிக்காவில் காணப்படுகிறது.

✱ நீரில் அதிகமாகக் கரையக் கூடிய வாயு அம்மோனியா.

✱ தனிம வரிசை அட்டவணையில் முதலிடம் வகிப்பது ஹைட்ரஜன்.

✱ எலுமிச்சம் பழத்தில் கிடைக்கும் அமிலம் சிட்ரிக் அமிலம்.

✱ புகையிலையில் உள்ள வேதிப் பொருள் நிகோடின்.

✱ தயிரில் உள்ள அமிலம் லாக்டிக் அமிலம்.

✱ வேலையைக் கண்டு பயப்படும் நோய் 'ஏரோடோஃபோபியா' (Eroto phobia) என அழைக்கப்படுகிறது.



✱ வால்ட் டிஸ்னி



✱ பிஷப் ராக்

- இரா.ரமேஷ், உ. எண் 1355, காளப்பட்டி

✱ கைரேகையை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைகளை கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.

✱ நீலப்புரட்சி என்பது மீன் உற்பத்தியைப் பெருக்குவது! வெண்மைப் புரட்சி என்பது பால் உற்பத்தியைப் பெருக்குவது! மருந்து வகை உற்பத்திக்கு இளஞ்சிவப்பு புரட்சி என்று பெயர். மஞ்சள் புரட்சி என்பது எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி!

✱ முதன் முதலில் கேள்விக்குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தீன்.

- ஜி.பிரபாகரன், உ. எண் 961, காஞ்சிபுரம்

✱ உப்பை விரும்பிச் சாப்பிடும் விலங்கு முள்ளம்பன்றி.

✱ இந்திய யானைகளின் சராசரி ஆயுள் காலம் 77 ஆண்டுகள்.

✱ உலகிலேயே மிகப் பெரிய தீவு க்ரீன்லாந்து. மிகச் சிறிய தீவு, சிசிலி அருகிலுள்ள 'பிஷப் ராக்'.

- பி.ராமன், உ எண் 1381, காஞ்சிபுரம்



புரட்சி!

கதம்பம்

தலையைத் திருப்பாமலே பின்னால் உள்ள பொருள்களைப் பார்க்கும். அத்தோடு 10 அடி தூரத்துக்கு தாவும் திறனும் கொண்டவை.

✱ விண்வெளியில் பயணம் செய்பவருக்கு வானம் கறுப்பு நிறமாகத் தெரியும்.

✱ ஒளியைப் பயன்படுத்தி நோயைக் குணப்படுத்தும் முறைக்கு 'போட்டோ



✱ கடல் பனை



✱ 'ஜெர்பா' எலி

பயாலஜி' என்று பெயர்.

✱ 'ஓ' குரூப் ரத்த வகையைச் சேர்ந்தவர்கள் 'யுனிவர்சல் டோனர்' என்று அழைக்கப்படுகின்றனர்.

- எஸ்.வினித் மாத்வன்,
உ. எண் 1196, மதுரை


✱ காந்தியடிகளை கௌரவிக்கும் வகையில் அவர் உருவத்தை தபால் தலையில் முதலில் வெளியிட்ட நாடு அமெரிக்கா.

✱ தாம் வாழ்ந்த காலத்திலேயே அதிக ஆஸ்கார் விருது பெற்றவர் வால்ட் டிஸ்னி.


- ந.பிருந்தா,
உ. எண் 1098,
மயிலாடுதுறை

✱ கடல் பனை என்ற தாவரத்தின் விதையை பூமியில் போட்டால், அது முளைப்பதற்கே 3 ஆண்டுகள் ஆகும். அப்படியே முளைத்தாலும் 100 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பூக்கும்.


✱ ஆப்பிரிக்காவில் 'ஜெர்பா' என்னும் ஒரு வகை எலிகள் உள்ளன. இந்த எலிகள்



புள்ளிகளை இணையுங்கள்



கொடுக்கப்பட்டுள்ள
எண்களை இணைத்து
ஒளிந்திருப்பது என்ன என்று
கண்டுபிடியுங்கள்



நுழைவாயில்!

ஆக்ரா என்றவுடன், தாஜ்மஹால் நினைவுக்கு வருவதுபோல, மும்பை என்றதும் நினைவுக்கு வருவது 'கேட்வே ஆஃப் இந்தியா'.

ஒருமுறை ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், அரசி மேரியும் மும்பைக்கு வந்தனர். அவர்கள் வருகையை யொட்டி கட்டப் பட்ட நினைவுச் சின்னம்தான் 'கேட்வே ஆஃப் இந்தியா'.

1911 மார்ச் 31ல் அடிக்கல் நாட்டப் பட்ட இந்தக் கட்டடம் 1924ல் முடிக்கப் பட்டு அன்றைய வைஸ்ராயால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு ஆங்கிலேயப் படைகள் நாட்டைவிட்டு வெளியேறின. ஆங்கிலப் படையின் கடைசி அணியாக 'சோமர்செட் லைட் இன்பாந்த்ரி பட்டாலியன்' இந்த கேட்வேயின் வழியே வெளியேறியது. 1948 பிப்ரவரி 28ல் படையின் கடைசி அணி வெளியேறிய நிகழ்ச்சி மிகப் பெரிய விழாவாக அந்த இடத்தில் கொண்டாடப்பட்டது.

கடற்பகுதியிலிருந்து மும்பை நகரின் நடுப் பகுதிக்கு வரும் வழியில் கேட்வே ஆஃப் இந்தியா கட் டப்பட்டுள்ளது. இது மும்பையில் காணத்தகுந்த இடமாக விளங்குகிறது.

மும்பையின் புகழ்பெற்ற 'எலிஃபெண்டா குகை'க்கு சற்றுலாச் செல் லும் பயணிகள் இங்கிருந்து படகில் செல்கிறார்கள். மராட்டிய மண்டலத்தின் மாவீரனான சத்ரபதி சிவாஜியின் திருவுருச் சிலை ஒன்றும் இங்கே நிறுவப்பட்டுள்ளது.

கடலோரம் நிற்கும்போது, மிகப் பழங்கால எலிஃபெண்டா குகைகள், அதற்குப் பிற்பட்ட முகலாய காலத்தின் சிவாஜி, பிரிட்டிஷ் காலத்தின் கட்டடம் என்று நீண்ட வரலாறு நம் நினைவுக்கு வருகிறது. ●



எஸ்.திவ்யா, உறுப்பினர் எண் :66, ஆத்தூர்

வயலுக்குள் சலசலத்துப் பாய்ந்து கொண்டிருந்தது தண்ணீர். சுளீரென்று சுட்ட சூரியனின் வெப்பம் குறைந்து மாலை நெருங்கும் சமயம்! உடலெங்கும் பொங்கிய வியர்வை அடங்க, மரத்தடியில் அமர்ந்திருந்த மருதன் எழுந்து வாய்க்காலில் இறங்கிக் குளித்தான். தலை துவட்டிக்கொண்டு, ஆடையை உடுத்தி மீண்டும் வரப்பினூடே நடந்தான்.

''ம்... இந்த முறையாவது விளைச்சல் நல்லாருக்கணும்'' என்று நினைத்தபடியே வந்தவன் சட்டென்று நின்றான். வயலை அடுத்து அமைந்திருந்த புற்றிலிருந்து வெளிப்பட்டது ஒரு நாகம்! அதைப் பார்த்த மருதன், 'நம் வயலைக் காக்கும் தேவதை இது' என்று நினைத்தான். வேகமாய் வீட்டுக்குப் போய் ஒரு கிண்ணத்தில் பாலை எடுத்து வந்தான். அதைப் புற்றின் அருகே வைத்துவிட்டு வீட்டுக்குப் போனான்.

மறுநாள் வயலுக்கு வரும்போது, புற்றைக் கவனித்தான். அதனருகே வைக்கப் பட்டிருந்த கிண்ணத்தில் பால் இல்லை. மாறாக ஒரு தங்கக் காசு இருந்தது. வியந்து போனான். நாக தேவதை தனக்கு அருள்வதாக எண்ணி மகிழ்ந்தான். அதன்பிறகு, அவன் பால் வைப்பதும், மறுநாள் அதில் தங்கக்காசு இருப்பதும் வழக்கமாயிற்று.

அதனால், விரைவில் பெரும் பணக்காரனானான் குமரன். என்றாலும் புற்றுக்குப் பால் வைக்கும் வழக்கத்தை மட்டும் விடவில்லை. அதே

எம்.மோனிகா
ஒன்பதாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, சேலம்



மறைந்த புற்று!



சமயம், ஏழைகளுக்கு உதவினான். படிப்பவர்களுக்கு உதவி செய்தான். தேவையறிந்து உதவும் குணம் அவனுக்கு மேலும் பெருமையளித்தது.

ஒருநாள்...

அவசரமான பணியை முன்னிட்டு வெளியூருக்குப் புறப்பட்டான் மருதன். தன் மகன் ராமனை அழைத்தான். ''நம் வயலருகே உள்ள புற்றின் அருகே தினமும் மாலை ஒரு கிண்ணம் பால் வைத்துவிடு. மறுநாள் காலை அந்தக் கிண்ணத்தில் என்ன இருக்கிறதோ, அதை எடுத்து பத்திரமாக வை. யாரிடமும் சொல்லாதே. இரண்டு நாளில் வந்துவிடுகிறேன்,'' என்றான்

தந்தை சொன்னபடியே செய்தான் மகன் ராமன். பாலை வைத்த சற்று நேரத்தில் புற்றிலிருந்து வெளிப்பட்டது பாம்பு. கிண்ணத்தின் மீது ஊர்ந்தது. அதைப் பார்த்த ராமன், விழுந்தடித்து ஓடினான். மறுநாள் காலை, புற்றை நெருங்கிப் பார்த்தபோது, கிண்ணத்தில் தங்கக் காசு மின்னியது.

'அட... இந்தப் புற்றுக்குள் பெரும் புதையல் இருக்கிறது. அதிலிருந்து தினம் ஒரு காசை இந்தப் பாம்பு கொண்டு வருகிறது. புற்றை இடித்தால், உள்ளேயிருக்கும் புதையலை மொத்தமாக நாம் எடுத்துக் கொள்ளலாம்' என்று ராமனுக்குத் தோன்றியது.



அவ்வளவுதான். வேகமாய் வீட்டுக்கு ஓடினான். கடப்பாரையும், மண்வெட்டியும் கொண்டு வந்தான். கடப்பாரையை உயர்த்தி பலங்கொண்ட மட்டும் வேகமாகப் புற்றின்மீது இறக்கினான். புற்று அதிர்ந்தது. மறுகணம் அதிலிருந்து சீறிக் கிளம்பியது நாகம்.

அதை வெட்டுவதற்காக மண்வெட்டியை நோக்கிக் குனிந்தான் ராமன். அதன்மீது சீறி நின்றது மற்றொரு பாம்பு! ராமன் இதை அறவே எதிர்பார்க்கவில்லை. விழுந்தடித்து ஓடினான். மறுநாள் ஊரிலிருந்து வந்த மருதன் அதிர்ந்தான். வேகமாய் வயலுக்குப் போனான். அங்கே புற்று இருந்ததற்கான அடையாளமே இல்லை!



காலில்லாத நண்டு!
என்னன்னு தெரியுமா?



I. 1. இத்தனூண்டு சிட்டுக் குருவிக்கு ஏழு முழம் சித்தாடை - அது என்ன?

2. வீட்டுக்குப் பின்னால் எட்டிப்பாரு, வேடிக்கை காட்டுவாள் மஞ்சள் பூக்காரி. பிஞ்சு விட்டாளது காயானால், பிரித்துப் பார்த்திட்டால் முத்துப் பெட்டி - அது என்ன?

3. ஆசைக்கும் பூசைக்கும் அடியேன் தேவை; அழுகின்ற குழந்தைக்கோ நேசம் தேவை; மங்கல நிகழ்ச்சிக்கு முன்னே நிற்பேன்; மலச்சிக்கல் போக்கிட மருந்தாய் ஆவேன் - நான் யார்?

4. அழகழகாய் தலைவிரித்து, அடுக் களையில் புகுந்து வந்து, விதவிதமாய் தாங்கி நின்று பலர் முன்னே இருக்கும். அது அடுத்த நொடி குப்பை மேட்டில் அம்போன்னு கிடக்கும்! - அது என்ன?

5. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி ஒன்று வாலினால் தண்ணீரை வற்ற வற்றக் குடிக்குது - அது என்ன?

6. பகலிலே வெறுங்காடு; இரவெல்லாம் பூக்காடு - அது என்ன?



7. வட்டவளைவு நண்டு, வாலுள்ள நண்டு; வேனில் காலந்தன்னில் வீட்டில் வேண்டும் நண்டு. காற்றில் ஆடும் நண்டு, காலில்லாத நண்டு; கையில் கொள்ளும் நண்டு, கரவு இல்லாத நண்டு. பெருமூச்சிடுமாம் நண்டு. இது என்ன?

8. ஆனை ஏறாத மலையிலே; ஆடு ஏறாத மலையிலே; ஆயிரம் பூப் பூத்திருக்கு - அது என்ன?

9. பட்டை உண்டு கட்டை இல்லை; இலை உண்டு கிளை இல்லை; பூவுண்டு மணமில்லை; பழம் உண்டு விதையில்லை; கன்று உண்டு மாடும் அல்ல - அது என்ன?

10. இரைச்சலோடு செல்லும் விமானம் அல்ல; இடியோசை தரும் வானமும் அல்ல - அது என்ன?

- **த.தரணி,**
உ. எண் 785, மூன்றாம் வகுப்பு,
தூய மார்ஸினா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

II. 1. சுருட்ட முடியும்; ஒடிக்க முடியாது! எடுக்க எடுக்க வளரும்; எண்ணெய் கண்டால் மடியும் - அது என்ன?

2. அடித்தால் விலகாது; அணைத்தால் நிற்காது - அது என்ன?

- **ஆர்.பிருந்தா,**
மதுரை

III. 1. உயரமானவன் தலையில் ஊற்றிய தண்ணீர் உருண்டோடி வருகிறது - அது என்ன?

2. ஓயாமல் ஓடுவான்; ஒரு நிமிடமும் ஓய்வெடுக்கமாட்டான் - அவன் யார்?

3. ஆண்டவன் வைத்த பொட்டு; அழிக்க முடியாது பொட்டு - அது என்ன?

- **ராம.மம்தாராம், உ. எண் 1091,**
ஏழாம் வகுப்பு,
டால்மியா மேல்நிலைப் பள்ளி,
டால்மியாபுரம்

விடைகள் :

I. 1. வெங்காயம், 2.வெண்டைக்காய், 3.வாழைப்பழம், 4.வாழை இலை, 5. விளக்கு, 6.வானம், 7.விசிறி, 8.விண்மீன், 9.வாழை மரம், 10.வாணவெடி

II. 1. தலைமுடி, 2.தண்ணீர்

III.1. மலையருவி, 2. கடல் அலை, 3.மச்சம்

வைரம் அதன் மேல் படும் ஒளியைப் பல வண்ணங்களாக எதிரொளிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், முதலில் நிலத்தில் இருந்து வெட்டி எடுக்கப்படும் வைரம் இப்படி இருக்காது. அது, மங்கலாக, கண்ணாடிக் கல் போல் தான் தோற்றமளிக்கும். இதைச் சிறு சிறு துண்டுகளாக்கி, வைரத் துகள்களினால் பட்டை தீட்டுவார்கள். இவ்வாறு பட்டை தீட்டப்பட்ட வைரக் கல்லின் மூலம் ஒளிக்கதிர் செல்லும் போது ஒளி விலகல் ஏற்படுகிறது. அந்த ஒளி விலகலால், வளையும் ஒளிக்கதிர் வானவில்லின் பல வண்ணங்களை எதிரொளிக்கிறது.

- பி.சர்வேஸ்வரன்,
உ. எண் 456,
மதுரை

காகிதங்களை நீண்ட நாள் வைத்திருந்தால், அவை நிறம் மாறி பழுப்பாவதேன்? தொட்டால் நொறுங்கி விடுவதேன்?

காகிதம் செய்யும்போது, அதை வெண்மையாக்க பல வேதிப் பொருட்களை அதனுடன் கலக்கின்றனர். நாட்கள் செல்லச் செல்ல இந்த வேதிப் பொருள்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஆவியாகி, செயலற்றுப் போய் விடுகின்றன. இதனால் காகிதம் தனது பழைய வெண்மை நிறத்தை இழந்து பழுப்பு நிறத்தில் காட்சியளிக்கின்றது.

அதேபோல், காகிதம் நொறுங்கிப் போவதற்குக் காரணம் அது தன் ஒட்டு விசையை இழப்பதுதான். காகிதத்தின்








மீது படும் ஒளியில் உள்ள புற ஊதாக் கதிர்கள், அதிலுள்ள ஒட்டு விச்சையைத் தாக்கி வலுவிழக்கச் செய்து விடுகின்றன. அதனால் காகிதம் நொறுங்குகிறது.

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475,
கோபிசெட்டிபாளையம்

உணவுப் பொருட்கள் வெளியில் இருப்பதைவிட ஃபிரிட்ஜில் இருக்கும் போது கெடாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன?

உணவுப் பொருட்களைக் கெடச் செய்யும் பாக்டீரியாக்களின் இனப்பெருக்கம், ஈரப்பதம் மற்றும் வெப்பநிலையைப் பொறுத்தே அதிகரிக்கும். சாதாரணமாக நம் வீடுகளில் பயன்படுத்தப்படும் பிரிட்ஜில் வெப்பநிலை மைனஸ் 5 டிகிரி செல்சியஸ் முதல் 10 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். ஃப்ரீசர் பகுதியில் மைனஸ் 10 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். உணவை ஃப்ரீசரில் வைக்கும்போது, உணவிலுள்ள நீர் உறைந்துவிடுகிறது. எனவே, பாக்டீரியாக்கள் செயல்பட முடியாமல் போய் விடுகிறது. ஃப்ரிட்ஜில் அவற்றின் இனப்பெருக்கம் குறைகிறது. எனவே, உணவுப் பொருட்கள் கெடாமல் இருக்கின்றன.

- எஸ்.சுப்ரியா,
உ. எண் 79,
சென்னை




கோகுலம்
மார்ச் 2010

இப்பவும் நான் ராஜா!





ஆயுதம்!

ஒரு முறை அன்னை தெரசா அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். நியூ ஜெர்ஸி விமான நிலையத்தில் இருந்து வெளியே வருவதற்கு முன் சோதனையிடும் இடத்துக்குச் சென்றார். சோதனை அதிகாரி, ''ஆயுதம் ஏதும் வைத்திருக்கிறீர்களா?'' என எல்லோரிடமும் கேட்பது போல், அவரிடமும் கேட்டார். ''ஆம் இருக்கிறது!'' என்றார் அன்னை தெரஸா. அதிகாரி நடுங்கிவிட்டார். புனித கன்னியர் உடையில் ஆயுதம் தாங்கியவரா என்று யோசித்த அதிகாரி, ''ஆயுதங்களா?'' என்றார். ''ஆம்! ஆயுதங்கள்தான்! பையில் எனது பிரார்த்தனைக்கான புத்தகங்களில் சில; மனத்தில் பிறருக்கான அன்பு'' என்றார் அன்னை தெரஸா அமைதியாக.

- **எஸ்.வினித் மாதவன்,**
உ. எண் 1196, மதுரை

மன உறுதி!

ஒருமுறை கஸ்தூரிபாய் காந்தி நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அப்பொழுது காந்திஜி, தாமே அவருக்கு மருத்துவம் செய்ய முடிவு செய்தார். உப்பு இல்லாமல் இயற்கை முறையில் உணவு உண்டால் நோய் குணமாகி விடும் என்பது அவர் நம்பிக்கை.

கஸ்தூரிபாயோ உப்பில்லாமல் உணவு உண்ண தன்னால் முடியாது

சூட்சுமம்!

முகலாய ஆட்சிக்கும் ஆட்சியாளருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் சிவாஜி.

தேசப் பற்றும், தெய்வப் பற்றும் ஒரு மனிதனின் இரு கண்களுக்கு ஒப்பானவை என்று போதித்தார் அவரது குரு ஸ்ரீசமர்த்த ராமதாஸ் சுவாமிகள். ஒரு சமயம் சிவாஜி தனது குருவான, ராமதாசருக்குப் பொன்னும் பொருளும் காணிக்கையாக அனுப்பி இருந்தார். அதை ஏற்ற சுவாமிகள் பதிலுக்குக் கொஞ்சம் கற்களையும், மணலையும் தமது ஆசிச் சின்னமாக அனுப்பினார்.



என்றும், தன்னால் மட்டுமல்ல; எந்த மனிதராலுமே முடியாது. என்றும் கோபமாகக் கூறினார். ஆனால் காந்திஜி, உப்பில்லாத உணவினை, தாம் ஒரு வருடம் உண்பதாகச் சபதம் செய்தார்.

இதனைக்கேட்ட கஸ்தூரிபாய் பதறி விட்டார். "சரி, சரி! நீங்கள் சொன்னபடி, நான் உப்பில்லாமல் உணவு சாப்பிடு கிறேன். அதற்காக நீங்கள் உப்பில்லா மல் உணவு உண்ண வேண்டாம் உங் கள் சபதத்தை மறந்து விடுங்கள்" என்றார்.


ஆனால் மகாத்மா, "நான் சபதம் செய்தால் செய்ததுதான். சொன்ன சொல் தவறமாட்டேன்" என்று கூறினார்.

அதுபோன்றே அன்றிலிருந்து ஒரு வருடம் உப்பில்லாமல் உணவு உண்டார். கணவருக் காக கஸ்தூரிபாய் அம்மையாரும் உணவை உப்பில்லாமல் உண்டு, தம் உடலைக் குணப்படுத்திக் கொண்டார்.



தாம் சொல்லும் எதையும் தாமே பின்பற்றக்கூடிய, அபரிமிதமான மனக் கட்டுப்பாடும், உறுதியும்தான் காந்திஜியுடைய புகழின் அடித்தளம்.

- சி.சாய்சுதர்ஷன்,
ஒன்பதாம் வகுப்பு,
பி.எஸ். சீனியர் செகண்டரி பள்ளி,
சென்னை






இதைப் பார்த்த சிவாஜியின் அன்னை ஜீஜாபாய்க்கு முகம் சுண்டிவிட்டது. "சிவாஜி! இதற்கு என்ன அர்த்தம்? உனது காணிக்கை அவருக்குப் பிடிக்கவில் லையா?" என்றார்.

சிவாஜி கடகடவெனச் சிரித்தார். "அம்மா இதன் சூட்சுமம் புரியவில் லையா? அவர் அனுப்பிய கற்களுக்குப் பொருள், 'உனக்கு நிறைய கோட்டைகள் கிடைக்கட்டும்' என்பதே! மணல், 'நிறைய நிலம் உனக்கு கிடைக்கட்டும்' என்கிற ஆசியைக் குறிக்கிறது" என்று பதிலளித்தார். அன்னையின் முகம் மலர்ந்தது.

- க.அபிஷேக், உ. எண் 518,
சென்னை

வண்ணம் தீட்டுங்கள்!




இங்குள்ள படத்துக்கு
வண்ணம் தீட்டி மகிழுங்கள்



கஸ்டமர் : சார், சீக்கிரமா ஒரு கவர் கொடுங்க பஸ்ஸைப் பிடிக்கணும்.

வியாபாரி : பஸ்ஸைப் பிடிக்கிற அளவுக்கெல்லாம் நம்ம கடையில கவர் இல்லீங்க.

- ஜி.லக்ஷ்மி,
உ. எண் 1429,
காஞ்சிபுரம்



''டாக்டர் நான் சைக்கிள் ஓட்டும் போது தலை சுத்துது.''

''ஆச்சரியமா இருக்கே. சைக்கிள் ஓட்டினா வீல்தானே சுத்தும்.''

- பி.பரத், நான்காம் வகுப்பு,
முஸ்தபா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம்

சாப்பிட வந்தவர் : மெது வடைக்கும் தயிர் வடைக்கும் என்ன வித்தியாசம்?

சர்வர் : இருபத்து நாலு மணி நேரம் தான் சார் வித்தியாசம்!



புரிஞ்ச விஷயம்!



ஆசிரியர் : நான் பாடம் நடத்தினதிலிருந்து நீ என்ன புரிஞ்சுக்கிட்டே சொல்லு.

மாணவன் : ஒரு நல்ல மாஸ்டர் கிட்டே டியூஷன் சேர்ந்தாத்தான் நான் இந்த வருஷம் பாஸாக முடியும்னு புரிஞ்சுக்கிட்டேன்.

- ஜி.பிரபாகரன்,
உ. எண் 1429, காஞ்சிபுரம்

கோட்ஸ் பியர்டு (Goat's Beard) :

தென் அமெரிக்காவில் காணப்படும் 'கோட்ஸ் பியர்டு' என்ற செடியில் பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூத்திருக்கும். ஒவ்வொரு கொத்திலும் சுமார் 10,000 பூக்கள் வரை இருக்கும். ஒரே சமயத்தில் அதிக மலர்கள் மலரும் தாவரம் இது. ஆசிய ஐரோப்பியப் பகுதிகளைத் தாயகமாகக் கொண்ட இந்தத் தாவரம், இப்போது ஆஸ்திரேலியா உள்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் காணப்படுகிறது.

புட்சர்ஸ் புரூம் (Ruscus aculeatus) :

புட்சர்ஸ் புரூம் (Butchers Broom) என்ற செடியில் இலைகள் தோன்றுவது கிடையாது.

குழந்தைப் பூக்கள்!



* பர்ப்பிள் ஆர்க்கிட்



* பூயா ரெய்மண்டி

இலைகளுக்குப் பதில் செடியினுடைய கிளைகளே இலைகளைப் போலத் தோற்றமளிக்கின்றன. இளம் பச்சை நிறத்தில் இதன் பூக்கள் காணப்படுகின்றன. பூக்கள் கிளைகளின் நடுவிலேயே மலர்கின்றன. ஆசியா மற்றும் ஐரோப்பியப் பகுதிகளைத் தாயகமாகக் கொண்ட தாவரம் இது.

குழந்தைப் பூக்கள்!

பர்ப்பிள் ஆர்க்கிட் (orchis mascula) என்ற செடி அழகான பூக்களை உற்பத்தி செய்கிறது. இதன் பூக்கள் ரோஜா, ஊதா உள்ளிட்ட நிறங்களில் காணப்படுகின்றன. பெரிய தொப்பி அணிந்த குழந்தையைப் போல, இந்தப் பூக்கள் தோற்றமளிப்பதால், குழந்தைப் பூக்கள் என்றும் இவை குறிப்பிடப்படுகின்றன. ஐரோப்பா மற்றும் வடகிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளில் காணப்படுகிறது இந்த மலர்.



* இரவு ராணி




புயா ரெய்மாண்டி (puya raimondi):

பெரு நாட்டில் காணப்படும் புயா ரெய்மாண்டி என்ற தாவரத்தில் பூக்கும் பூ மிகவும் நீளமானது. இந்தப் பூ 33 அடி நீளம் வரை பூக்கிறது. கையில் பிடிக்கும் டார்ச் விளக்குப் போல தோற்ற மளிப்பதால் இதனை 'டார்ச் விளக்குப் பூ' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

- இரா. ரமேஷ், உ. எண் 1355, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, கோவை




* மெழுகுவர்த்திப் பூ



* புட்சர்ஸ் ப்ரூம்

மெழுகுவர்த்திச் செடி

மத்திய ஆஸ்திரேலியாவில் 'மெழுகு வர்த்திச் செடி' என்ற ஒரு வகைத் தாவரம் காணப்படுகிறது. இதில், நீளமான மெழுகுவர்த்தி போன்ற பூக்கள் பூப்பதால் இந்தப் பெயர். இந்தத் தாவரம் பனைமரம் போன்ற குறுகிய தண்டுப் பகுதியும் அதற்கு மேலே வளைந்த கிளைகளும் கொண்டது. கிளைகளுக்கு நடுவில் பூக்கள் நீளமாகப் பூக்கின்றன.



இரவு ராணி!

இரவு (இ)ராணி என்பது ஒரு வகையான கள்ளிச்செடி. இந்தக் கள்ளச் செடி நள்ளிரவில் மட்டுமே மலரும் இயல்புடையது. நள்ளிரவில் பூ மலர்ந்ததும், அதன் நறுமணம் வெகு தூரம் வரை பரவுகிறது. அதாவது, அரை மைல் தூரத்தில் இருப்பவர்கள் கூட இதனுடைய நறுமணத்தினை உணர முடியும். கள்ளிச் செடி வகைகளிலேயே அதிக நறுமணம் உடையது இந்தச் செடியின் மலர்தான்.

- ம.விவேக், குட்டம்

குதிரையின் கோபம்!

கதை: அ.வேல்முருகன், உ.எண்.951, நம்பியூர். படம்: பிள்ளை




என்னோட புல் வெளியில தினம் ஒரு மான் வந்து மேயுது.
ஓஹோ! உன் உணவுக்கு ஆபத்து வந்துடுச்சா!
அதை, வராம விரட்டணும்.
நான் துரத்தறேன்; அது எங்கே இருக்கு?
நாளைக்குக் காட்டறேன்.
சரி, வா!
மறுநாள் காலை...
ஆ... எதுக்கு இதெல்லாம்?
அதுவா? தப்பினா பிடிக்கவும், குத்தவும் தான்!
அதோ பார்... மான் மேயுது!
கவலையை விடு; இனிமே போட்டி இல்லை...
ஈட்டி பாய்ந்த மான்...
ஆ!
சபாஷ்; சரியான குறி! ஹே.. என்னை ஏன் கட்டறே?
ஹா.. ஹா.. சாப்பிட மான்; சவாரிக்கு நீ! அதுக்குத்தான்!



தூரம் எவ்வளவு?

I. 1) ஒருவன் 15789 என்பதை XTZAL என்று எழுதுகிறான். 2346 என்பதை NPSU என்று எழுதுகிறான். அப்பொழுது 23549 என்பதை எவ்வாறு எழுதுவான்?

2) PAINT என்பதை 74128 என்றும் EXCEL என்பதை 93596 என்றும் எழுதுகிறான். அப்பொழுது ACCEPT என்பதை எவ்வாறு எழுதுவான்?

3) வித்தியாசமானது எது?

1. காரட் 4. இஞ்சி
2. உருளைக் கிழங்கு 5. பீட்ரூட்
3. தக்காளி 6. முள்ளங்கி

4) வித்தியாசமானது எது?

1. பல்லி 4.திமிங்கலம்
2.பாம்பு 5. முதலை
3. ஆமை

5) வித்தியாசமானது எது?

1. ஹரியானா 4. குஜராத்
2.தமிழ்நாடு 5. மஹாராஷ்டிரா
3. கேரளம்

6) ராமனும், ரகீமும் அவர்கள் சொந்த ஊரான மருத குளத்தி லிருந்து மதுரைக்கு ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்றார்கள். திருமணம் காலை 10.00 மணிக்கு, ராமன் மணிக்கு 30 கி.மீ. வேகத்தில் செல்லும் ராஜ்தூத்தில் சென்றான். இருவரும் மருத குளத்தில் இருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டார்கள்.

ரகீம் திருமண நேரத் துக்கு 2 மணி நேரம் முன்னதாகவே சென்று விட்டான். ராமன் சரியாக 10 மணிக்கு கணக்காகப் போய் சேர்த்தான். அப்படியென்றால் மருத குளத்துக்கும், மதுரைக்கும் இடையே உள்ள தூரம் என்ன?'' ராமன் ரகீமிடம் கேட்டான். அவன் சரியான விடையை கூறிவிட்டான். நீங்கள் கூறுங்களேன். அவர்கள் பயணம் செய்த தூரம் என்ன? எத்தனை மணிக்கு மருத குளத்திலிருந்து புறப்பட்டார்கள்?

- ர.கவினி, உ. எண் 522, மங்கலம்

II. 1. லாலா லஜிபதிராயைக் குறிப் பிடும் அடைமொழி என்ன?

2. ஆங்கிலேயர் இந்தியாவில் காலூன்ற வழி வகுத்த போர் எது?

3. சமுதாயத்தின் நான்காவது தூண் என்று சொல்லப்படுவது எது?

4. காளைச் சண்டைக்குப் பெயர் பெற்ற நாடு எது?

5. எந்த நாட்டில் பாதி அளவுக்கு மேல் பைன் மரக்காடுகள் பரந்துள்ளன?

6. இந்தியாவில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட முதல் நகரம் எது?

7. 'தாவரங்களுக்கும் உயிர் உண்டு' என்பதைக் கண்டுபிடித்தவர் யார்?




III. 1. இந்திய அரசு முத்திரையில் உள்ள 'சத்தியமேவ ஜெயதே' என்ற வாக்கியத்தின் பொருள் என்ன?

2. 'உலக வங்கி' அமைந்துள்ள இடம் எது?

3. டென்மார்க் நாட்டின் தேசியப் பறவை எது?

4. சர்தார் வல்லபபாய் படேல் உரு வாக்கிய இயக்கம் எது?



விடைகள் 56ம் பக்கம்

8. 'பிளாஸ்டர் ஆப் பாரீஸ்' தயாரிக்க உதவும் கனிமப் பொருள் எது?

9. உலகை முதன் முதலில் வலம் வந்த ஸ்பெயின் நாட்டுக் கப்பலின் பெயர் என்னு?


- எஸ்.வினித் மாதவன்,
உ. எண் 1196, மதுரை


5. 'தாருணி புஷ்பம்' என்பது எந்த மலரின் பெயர்?

6. சென்னை மாநகராட்சிக் கட்டடத்தின் பெயர் என்ன?

-எம். மிருணாளினி,
ஏழாம் வகுப்பு, சுந்தர் மெட்ரிக்
மேனிலைப் பள்ளி, மதுரை


வித்தியாசங்களைக் கண்டுபிடி!






இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள். விடைகள் 56ம் பக்கம்

சுட்டீஸ் கைவண்ணம்! திறமை



ஐ.தாமரைச் செல்வன்,
ஐந்தாம் வகுப்பு,




ஏ.தி.ஆதித் பிரணவ்,
முதல் வகுப்பு, உ. எண் 1388, டி.ஏ.வி.
பெல் பள்ளி, இராணிப்பேட்டை

டி.ஆர்.ரேகா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி



ஏ.நாராயணன்,
ஐந்தாம் வகுப்பு,
உ. எண் 1204, சேலம்





ரா.வைஷ்ணவி,
உ. எண் 625, ஐந்தாம்
வகுப்பு, செகந்திராபாத்



உப்பு வியாபாரி பாலன், தினந்தோறும் கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அதைக் கடந்துதான் ஊருக்குள் போக வேண்டும்.

ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம்போல் கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்தான். அப்போது அவன் மனைவி, "ஏங்க, தினம்தான் உப்பு சீக்கிரம் வித்துப் போய்டுதே. இன்னொரு மூட்டையை கூடுதலா எடுத்துட்டுப் போனா என்ன?" என்றாள்.

"எடுத்துட்டுப் போலாம். ஆனா, கழுதையால சுமக்க முடியாது. பாவம்" என்றான் பாலன். என்றாலும், கூடுதலாக இன்னொரு மூட்டையை கழுதையின் முதுகில் ஏற்றினான்.

வியாபாரத்துக்குக் கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள



பெ.ராமன் உ.எண்.1381, காஞ்சிபுரம்.



கரைந்த உப்பு!

ஆற்றைக் கடந்துபோது எதிர் பாராமல் கால் வழுக்கி, கழுதை ஆற்றுக்குள் விழுந்தது. அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை ஆற்றில் நனைந்து ஒரு சில நிமிடங்களில் தண்ணீரில் கரைந்து பாதி மூட்டையாகிவிட்டது! எனவே, கழுதையின் முதுகில் இருந்த உப்பு வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது.

வியாபாரம் செய்ய உப்பு இல்லாததால் பாலன் கழுதையை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான். மறுநாளும் வழக்கம்போல வியாபாரத்துக்குக் கிளம்பினான். முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்குக் கனமாக இருந்தது.

இன்றும் முதல் நாள் போல கூடுதலாக இன்னொரு மூட்டையை ஏற்றியிருந்தான். மூட்டையின் கனம் தாங்காமல், கழுதை தள்ளாடி நடப்பதைக் கவனித்தான். முந்தைய நாளின் நினைவு வந்தது அவனுக்கு!

நேற்றைப் போல இன்றும் ஆற்றினுள் கழுதை விழுந்தால், உப்பு கரைந்துவிடும். பெரும் நஷ்டம் ஏற்படும் என்று புரிந்தது. அப்படி நினைக்கும்போதே, கழுதை தள்ளாடிக் கீழே விழுந்தது. மூட்டைகளும் தரையில் விழுந்தன.

நல்ல வேளை, ஆற்றங் கரையிலேயே விழுந்ததால், உப்பு மூட்டை நீரில் விழவில்லை. மூட்டைகளை அகற்றி கழுதையை விடுவித்த பாலன், அதன் கால்களை உருவிவிட்டான். எப்படி மூட்டைகளை எடுத்துச் செல்வது என்று யோசித்தான். வழக்கம்போல, இரண்டு மூட்டைகளை கழுதையின் முதுகில் ஏற்றியவன், மூன்றாவது மூட்டையை தன் தலையில் சுமந்தபடி ஆற்றினுள் இறங்கினான். இப்போது கழுதை நிதானமாக நடந்தது. பத்திரமாக ஆற்றைக் கடந்து கரையேறியது. பாலனும் நல்லபடியாக வியாபாரத்தை முடித்து வீடு திரும்பினான். அதன்பிறகு, பாலன் கழுதையின் முதுகில் கூடுதல் மூட்டை ஏற்றவுமில்லை; கழுதை நீரில் விழவுமில்லை. ●





சரியான்னு பாருங்க!

I. 1.NPTSL, 2. 455978, 3. தக்காளி. மற்றவை எல்லாம் வேரில் இருப்பவை. தக்காளி என்பது ஒரு செடி வகை. 4. திமிங்கலம் தண்ணீரில் வாழ்பவை. மற்றவை எல்லாம் ஊர்வன இனத்தை சார்ந்தவை. 5. ஹரியானா மாநிலத்தை தவிர மற்ற மாநிலங்கள் எல்லாம் கடலோர மாநிலங்கள் ஆகும்.

6. மருதகுளத்துக்கும் மதுரைக்கும் இடையிலான தூரம் x கி.மீ. அதை அடைய ராமனுக்கான நேரம் $x / 30$; இரண்டு மணி நேரம் முன்னதாக அடைந்த ரகீமுக்கான நேரம் $x / 45$. வித்தியாசம் : $x / 30 - x / 45 = 2$. அதாவது $3x - 2x / 90 = 2$. $x = 180$ கி.மீ. $180 / 30 = 6$ மணி நேரம் (ராமன் பயணித்த நேரம்), திருமண நேரம் காலை 10 மணி. எனவே புறப்பட்ட நேரம் (10-6) காலை 4 மணி.

II. 1. பஞ்சாப் கேசரி / பஞ்சாப் சிங்கம், 2. பக்ஸார் போர், 3. பத்திரிகை, 4.ஸ்பெயின், 5.ஸ்வீடன், 6.ஜெய்ப் பூர், 7.ஜெகதீஸ் சந்திரபோஸ், 8.ஜிப்சம், 9. விக்டோரியா

III. 1. வாய்மையே வெல்லும், 2. வாஷிங்டன், 3. வானம்பாடி, 4. வரிகொடா இயக்கம், 5. ரோஜா, 6. ரிப்பன் பில்டிங்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

1.குழந்தை ஜட்டியின் வண்ணம், 2.எலியிடம் இருக்கும் வடை, 3.பாட்டில் பாலின் அளவு, 4.பூனையின் கைவிரல், 5.பூனையின் கண்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்

(டைஜஸ்ட் பகுதி)


47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!


சிங்குவின் வருத்தம்!

தை: கே.ஜே.ஷிஃபானா அப்ஸின் உ.எண்:973, கூத்தாநல்லூர் படம்: பிள்ளை





குட்டியுடன் சீல்




தகவல்



காட் ஃபிஷ்





80 லட்சம் முட்டைகள்!

உலகெங்கும் தினந்தோறும் உணவுக்காக லட்சக்கணக்கில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அப்படியிருந்தும் மீனினம் மீதியிருக்கக் காரணம், அவை ஒரு முறைக்கு லட்சக்கணக்கான முட்டைகள் இடுவது தான். உதாரணமாக, காட் ஃபிஷ் (cod fish) ஒரு தடவைக்கு எண்பது லட்சம் வரை முட்டையிடும். அவை பொரிந்து குஞ்சுகளாகி வெளிப்படும். என்றாலும், தம் வாயை அகலத் திறந்தபடி வரும் பெரும் மீன்களிடம் இருந்து தப்பிப் பிழைப்பவை இவற்றில் சில மட்டுமே! அட, மனிதனைக் காக்க இயற்கையின் ஏற்பாடு!

ஸ்கூட்டர்!

மால்டீஸ் இனத்தை சேர்ந்த இந்த நாய்குட்டியின் பெயர் ஸ்கூட்டர். இதன் உயரம் 3.2 அங்குலம். உலகிலேயே மிகக் குள்ளமான நாய்களில் இதுவும் ஒன்று. தேநீர்க் கோப்பையில் கால்களை வைத்து விளையாடும் இந்த நாய்க் குட்டியை, ஷெரில் என்ற நியூசிலாந்துப் பெண் வளர்க்கிறார்.

அண்டார்டிக் சீல்கள்

உலகின் குளிர் மிகுந்த பகுதி என்று சொல்லப்படுவது அண்டார்டிக். எப்போதும் பனி மூடியிருக்கும் இக் குளிர்ப் பிரதேசத்தில், சில வேளைகளில் மணிக்கு 320 கி.மீ. வேகத்தில் காற்று வீசும். இங்குள்ள வெப்ப நிலை - 89டிகிரி செ. எனவே, இங்கு குறிப்பிட்ட சிலவகை உயிரினங்களே வாழ முடியும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சீல்கள். கிராபீட்டர் சீல், லெபர்ட் சீல், ராஸ் சீல், வெட்டல் சீல் என்பன முக்கிய இனங்களாகும்.

- ஏ.ஸ்ரீபாரதி, உ. எண் 919, கும்பகோணம்



வாழைப்பழ நத்தை

வட அமெரிக்காவிலுள்ள பசிபிக் கடற்கரையோரம் காணப் படுவது வாழைப்பழ நத்தை. பச்சை வாழைப்பழம், மஞ்சள் வாழைப் பழம், சில நேரங்களில் தோலை உரித்தால் இருக் கும் வெள்ளை நிறம் போன்று பல நிறங்களில் இந்த நத்தைகள் காணப்படும். இவற்றைக் கையில் எடுத்தால் வழுக்கி கீழே விழுந்துவிடும். காரணம், இவற்றின் உடலின்மீது கொழ கொழப்பான பசை போன்ற திரவம் காணப்படும். இது பெரும்பாலும் உப்பு நீர்ப் பகுதிகளில் காணப்படும்.

- எஸ்.சுப்ரியா, உ. எண் 79, சென்னை

"என்னப்பா சர்வர், தோசையோட ஒரு கல்லையும் சேர்த்து கொண்டு வந்து வைக்கிறே?"

"நீங்கதானே சார் கல் தோசை வேணும்னு கேட்டீங்க?"

- ப.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி






**மானேஜர் : மாடு வாங்க லோ
கேக்கறீங்களே.
எப்படிக் கட்டுவீங்க**

**விவசாயி : கயிறு
போட்டுத்தான்!**

"நைட் வாட்ச்மேன் வேலை வேணும்னு கேட்கறியே, என்ன அனுபவம் இருக்கு?"

"சின்ன சத்தம் கேட்டாக் கூட போதும் சார், பட்னு முழிச் சுடுவேன்."

- ஜி.சிந்தியா, இராஜபாளையம்




" 'திஸ் ஈஸ் மை பென்'. இதுக்கு தமிழ்ல என்ன அர்த்தம் சொல்லு."

"இது 'மை' பேனா!"

"???!!"

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி



கலகலா காலனி!

கட்டும் விதம்!



"படிக்கிற வயசுல ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் தூங்கினா போதும்."

"வீட்டுலயா, ஸ்கூல்லயா சார்."

- ஜி.சிந்தியா, இராஜபாளையம்



"என் பையன்தான் ஸ்கூல்லேயே ஃபர்ஸ்ட்."

"அப்படியா?"

"ஆமாம். காலை ஏழரை மணிக்கெல்லாம் ஸ்கூலுக்குப் போயிடுவான்."

- சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி





"மணியை ஏன்டா அடிச்சே?"


"நீங்கதானே சார் பீரியட் முடிஞ்சுடுச்சு. போய் மணியை அடின்னு சொன்னீங்க."

- ப.தர்ஷிணி, கும்பகோணம்

பூத்துப் பூக்கும்!

உலகில் மலர்கள் பூக்கும், வாடும்;
உதிரும், ஆனால் என்றும்
உலவும் கதிராய் ஒளிரும் ஒன்று
அதுவே எங்கள் நட்பு!
விண்ணில் இறைவன்
விதைத்த ஒளிப்பூ
விண்மீன்! என்றால் சுழலும்
மண்ணில் மனிதன் உணர்ந்த சிறப்பு
மலர்ச்சி ததும்பும் நட்பு!

துயரில் துணையாய்,
வெற்றியில் பலமாய்
தொடரும் ஒருபூ நட்பு!
வெயிலோ மழையோ
பனியோ எதுவும்
வருத்தா நற்பூ நட்பு!



துணிவாய் அறிவாய்
வழியாய் வளரும்
தன்மைக் கொருபூ நட்பு!
பணிவாய் இதமாய் பதமாய்ச் சுட்டிப்
பேணும் அன்பே நட்பு!

பூத்துக் காய்த்து கனியாய் மாறும்
பூக்கள் பலவும் உண்டு!
பூத்துப் பூத்துப் பூத்துப் பூக்கும்
பூவின் பெயரே நட்பு!

- ஜா.ஜெ.அல்போன்சா,
பன்னிரண்டாம் வகுப்பு, திருச்சி

பய

உலகம் முழுவதும் நமக்கு இருக்கு - இதில்
உயர்வு தாழ்வு இனி எதற்கு?
எதற்கும் அஞ்சா மனமிருக்கு!
சொன்னதைச் செய்யும் திறமிருக்கு!
வானம் வரையிலும் நம் இலக்கு - அதை
அடைந்து காட்டுவோம் சோர்வு எதற்கு?
தெளிவாய் அறிவுடன் செயலிருக்கு

மலரட்டும்!

முயற்சி செய் முயற்சி செய்
முடியும்வரை முயற்சிசெய்
தடைகளையே கண்டாலும்
தளராமல் நீ முயற்சிசெய்.

கல்வியுடன் விளையாட்டு
கைத்தொழிலும் கற்றறி!
நல்லறிவும் நல்லுணர்வும்
நலமுடனே தேர்ந்தறி!

தெளிவான எண்ணமுடன்
துணிவோடு முயற்சிசெய்!
களிப்போடும் விருப்போடும்
காலமெல்லாம் முயற்சிசெய்!

தனக்கென்றும் பிறர்க்கென்றும்
தரணியிதன் நலத்துக்கும்



மனமொன்றி முயற்சிசெய்!
மலரட்டும் திசையெல்லாம்!


முனைப்போடு உழைத்தாலே
முன்வருமே வெற்றிகள்.
முயற்சியின் விளைவாலே
முளைத்தெழுமே புகழெலாம்!

- ஏ.சுந்தரராஜன்,
உ. எண் 1158,
பு.தி.வ.ச.உ.நி. பள்ளி,
திருக்கழுக்குன்றம்

...வண்டாம்!

திடமும் ஊக்கமும் மனத்திருக்கு!
தேவை இல்லா பயம் எதற்கு
தேடி வரும் ஜெயம் நமக்கு

- பெ.சண்முகம், உ. எண் 1169,
பத்தாம் வகுப்பு,
சங்கர் மேல்நிலைப் பள்ளி,
திருநெல்வேலி



இயற்பியலில் முதல் நோபல்!



✸ ஜெர்மனியைச் சேர்ந்த இவர், 1845 மார்ச் 27ல் பிறந்தவர்.

✸ இவரது தந்தையார் ஜவுளி வியாபாரம் மற்றும் உற்பத்தி துறையில் ஈடுபட்டவர்.

✸ இவர் ஜூரிச் பல்கலைக் கழகத்தில் பயின்று டாக்டர் பட்டம் பெற்றவர்.

✸ வுர்ஸ்பெர்க் (wurzburg) யுனிவர்சிடியில் இயற்பியல் துறைத் தலைவராகப் பணியாற்றும்போது தான் ஓர் மருத்துவ அற்புதத்தைக் கண்டுபிடித்தார்.

✸ 'இரண்டாவது அறிவியல் புரட்சியின் ஆரம்பம்' என இவரது கண்டுபிடிப்பை விஞ்ஞானம் வர்ணித்தது.

✸ முதன்முதலில் இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமை இவருக்குண்டு.

✸ எக்ஸ்-ரேயை கண்டுபிடித்தபோதும், அதை முறைப்படி உரிமைப் பதிவு செய்து கொள்ள மறுத்தவர்.

✸ இவரது கண்டுபிடிப்பில், முதன் முதலாக எக்ஸ்-ரே எடுக்கப்பட்டது, இவரது மனைவியின் கரம் தான்!

✸ தன்னுடைய கண்டுபிடிப்பின் முழுப் பயனும், மனித குலத்துக்குக் கிடைக்க வேண்டும் என்று விரும்பியவர்.

✸ அதனால் 1923-ல் இறக்கும் போதும் ஏழையாகவே இருந்தார்.

இவர் யார்?

- ஜி.எஸ்.ஸ்ரீமதி, உ. எண் 1382, கோபி

வில்ஹெல்ம் கான்ராட் ரான்ட்ஜன்
(Wilhelm Conrad Rontgen)



கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

ந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் மூன்றாவது அட்டையில்!

501. பி.நித்தியபாரதி, இரண்டாம் வகுப்பு, ஜவஹர் மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி
502. கே.ஜானகி, சேகலா சேம்பர்லின் கான்வென்ட், மலேசியா
503. கே.நிவாசினி, சேகலா சேம்பர்லின் கான்வென்ட், மலேசியா
504. பி.கவிபாரதி, நான்காம் வகுப்பு, ஜவஹர் மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி
505. கே.கார்த்திக், பதினொராம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, கரூர்
506. க.பாண்டியராஜன், பன்னிரண்டாம் வகுப்பு, உக்கடை அப்பாவுத் தேவர் மேல்நிலைப் பள்ளி, அம்மாபேட்டை
507. டி.சக்திவேல், பதினொராம் வகுப்பு, குருவப்பா மேல்நிலைப் பள்ளி, பழனி
508. எல். காயத்ரி, எட்டாம் வகுப்பு, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கும்மிடிப்பூண்டி
509. எஸ்.ஹரிகார்த்திக், ஒன்பதாம் வகுப்பு, பிஷப் உபகாரசாமி மேல்நிலைப் பள்ளி, திருப்பூர்
510. கே.விலாசினி, எஸ்.எம்.கே. டார்சிசியன் கான்வென்ட், மலேசியா
511. அ.இர்பானா பர்வின், ஐந்தாம் வகுப்பு, செவன்த் டே அட்வென்டிஸ்ட் மெட்ரிக் பள்ளி, திருச்சி
512. எஸ்.ஸ்ரீராம், மூன்றாம் வகுப்பு, செயின்ட் ஜான்ஸ் நிறைநிலை மேல்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம்
1513. சி.சிவகுரு கௌதம், ஏழாம் வகுப்பு, நிர்மலா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம்
1514. என்.பிரதீப், எட்டாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம்
1515. ஜி.சரவணன், பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1516. எஸ்.பிரபாகரன், எட்டாம் வகுப்பு, டிரஸ்டுபுரம் மேல்நிலைப் பள்ளி, சென்னை



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1517. ஏ.ராம்குமார், பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம்.நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1518. ச.ஸ்வேதா, ஐந்தாம் வகுப்பு, வேலம்மாள் நிறைநிலை மேல்நிலைப் பள்ளி, சூரப்பட்டு
1519. எம்.ராஜேஷ், பதினொராம் வகுப்பு, கெல்லட் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1520. எஸ்.தினகரன், ஒன்பதாம் வகுப்பு, டிரஸ்டுபுரம் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1521. கே.லோகேந்திரகுமார், எட்டாம் வகுப்பு, மில்பாசந்த் தாதா செகண்டரி பள்ளி, சென்னை
1522. வி.ரம்யா, 'பிரைமரி & நர்ஸரி' சி.எஸ்.ஐ. பள்ளி, நாகப்பட்டினம்
1523. எஸ்.ஆர். ஓவியா, பிருந்தாவனம் பள்ளி, செங்கல்பட்டு
1524. செ.சந்தோஷ், எட்டாம் வகுப்பு, க்ளுனி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தேவிகாபுரம்
1525. ஜி.நந்தினி, ஆறாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஒசூர்

காணாமல் போன ஒட்டகம்!

கதை : டி.எம்.சுந்தரராமன்
படம் : பிள்ளை




விளையாட்டு

உலகளவில் ஓர் இந்திய வீரர் முதலிடத்தில் இருப்பது அபூர்வம். கடந்த மூன்று வருடங்களாக செஸ் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்த் தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறார். போட்டிகளில் பங்கேற்காத சமயத்தில் சென்னை வரும் ஆனந்த் - டிசம்பர் 11, அவர் பிறந்த நாளன்று, அனாதை ஆசிரமங்களுக்குச் சென்று குழந்தைகளைச் சந்திப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார்.

கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் கொடுத்து மும்பை ஐ.பி.எல். அணி மேற்கு இந்தியத் தீவைச் சேர்ந்த கிரோன்



* பெடரர்



* பொலார்ட்

பொலார்ட்டை வாங்கியிருக்கிறது. 'அணிக்கு ஆல்ரவுண்டர் தேவை' என்று சச்சின் விருப்பப்பட்டார். அதனால்தான் என்ன விலை ஆனாலும் வாங்கிவிட வேண்டும் என்று ஏலத்தில் ஜெயித்தோம்' என்கிறது மும்பை ஐ.பி.எல். அணி. 'சச்சின் ஆடுகிற அணியில் நானும் ஆடுகிறேன் என்பது என் பாக்கியம்' என்று பதிலுக்கு சச்சினைப் பாராட்டுகிறார் பொலார்ட். இந்த ஐ.பி.எல்.-லில் இவர்மீதுதான் எல்லோருடைய கண்களும் இருக்கும்.

பெடரர் இன்னொருமுறை கிராண்ட்ஸ்லாம் கோப்பையை (ஆஸ்திரேலியன் கிராண்ட்ஸ்லாம்) வென்றிருக்கிறார். 28 வயதுதான் ஆகிறது. அதற்குள் டென்னிஸ் உலகம் இவர் கையில். 'இதுவரை ஆடிய வீரர்களிலேயே இவர்தான் சிறந்தவர்' என்று எல்லா டென்னிஸ் வீரர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். அவரது சாதனைகளைத் தோற்கடிப்பது கடினம் என்று

சொன்னாலும் அதை அவர் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். 'சாதனை என்பதே முறியடிக்கத்தான். நிச்சயம் என்னைவிட வும் சிறந்த வீரர் வருவார் என்று நான் நம்புகிறேன்' என்கிறார்.



* பத்ரிநாத்

இப்பவும் நான் ராஜா!



* அர்ஜுன்



* விஸ்வநாதன் ஆனந்த்

ச.ந.கண்ணன்

சச்சினின் 13 வயது மகனான அர்ஜுனும் கிரிக்கெட் களத்தில் குதித்து விட்டார். சமீபத்தில் நடந்த 13 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில், அவர் மும்பை அணி சார்பாக கலந்து கொண்டார். அப்போது சச்சின் பங்களா தேஷில் இருந்ததால், மகனின் ஆட்டத்தைக் காணமுடியவில்லை. ஆனால் மகன் கலந்துகொண்ட ஆட்டத்தை அர்ஜுனின் அம்மா பார்வையாளர்கள் வரிசையில் நின்றுகொண்டு பார்த்தார்.

இந்திய கிரிக்கெட் அணியில் இப் போதெல்லாம் நிறைய தமிழக வீரர்களைக் காண முடிகிறது. பத்ரிநாத், முரளி விஜய், தினேஷ் கார்த்திக் ஆகிய மூன்று வீரர் களும் இந்திய அணியில் அடிக்கடி இடம் பிடிக்கின்றனர். அஷ்வின், முகுந்த் போன்ற வீரர்களும் அடுத்த நிலையில் இருக்கிறார்கள். ஸ்ரீகாந்துக்குப் பிறகு விரைவில் ஒரு தமிழக வீரர் இந்திய கேப்டனாக இருப்பார் என்று நம்புவோம். ●

இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் தீவுக் கூட்டங்களின் தொகுப்புதான் அந்தமான் நிகோபார் தீவுகள்.

இதில் மொத்தம் 572 தீவுகள் இருக்கின்றன. இவற்றில், வடபகுதியில் உள்ளவை அந்தமான் தீவுகள்; தென் பகுதியில் இருப்பவை நிக்கோபார் தீவுகள்; இவற்றின் கிழக்குப் பகுதியில் உள்ள கடற்பகுதி அந்தமான் கடல் என்று அழைக்கப்படுகிறது. மேற்கு திசையில் வங்காள விரிகுடா உள்ளது. இந்திய யூனியனைச் சேர்ந்த அந்தமான் நிக்கோபார் தீவுகள் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுள் ஒன்று. அந்தமான் தீவில் அமைந்துள்ள போர்ட் பிளேர், இதன் தலைநகரம். மக்கள் தொகை சுமார் மூன்றரை லட்சம். ஆண்கள் ஒரு லட்சத்து 93 ஆயிரம் பேர். பெண்கள் ஒரு லட்சத்து 63 ஆயிரம் பேர்.

தமிழ், மலையாளம், இந்தி, பெங்காலி, ஆங்கிலம், நிகோபாரி ஆகியவை இப்பகுதியின் அதிகாரபூர்வமான ஆட்சி மொழிகள். மக்கள் தொகையில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 81 சதவிகிதம்

ஆரம்ப காலத்தில் இந்தத் தீவுகளி வசித்த பழங்குடி மக்கள் பிரிவுகளி முக்கியமானவை அந்தமானியர்கள் ஜாரவா, ஜங்கில், ஓங்கே, நிகோபாரியர்கள் ஷாம்பென் போன்றவை மிகவும் முக்கி மானவை.

செல்லுலர் ஜெயில்

பதினேழாம் நூற்றாண்டில், அந் மானில் மராத்திய கப்பற்படைத்தள ஒன்று அமைக்கப்பட்டது. அடுத்த பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களை தண்டிக்கு இடமானது அந்தமான். இங்கே கட்ட பட்ட செல்லுலர் ஜெயிலில் அடைக்க பட்டு, கடுமையான சித்ரவதைக்குள்ளா சுதந்திரப் போராட்ட வீரர்கள் பலர். இன்று அது ஒரு தேசிய நினைவுச் சின்னமா ஏராளமான சுற்றுலாப்பயணிகளை ஈர்க் கிறது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் கருமை படிந்த பக்கங்களை வெளிச்சம் போட்டுக் காட்டி, நெஞ்சை நெகிழ வைக்கும்படியான ஒலி-ஒளி காட்சி இங்கே தினமும் நடைபெறுகிறது.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானியர் வசமான அந்தமான், நிக்கோ



கௌதம் ராம்

பார் தீவுகள், இந்திய தேசிய ராணுவத்தின் தலைவரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வசம் ஒப்படைக்கப்பட்டன.

இந்திய யூனியனில்...

பிறகு, 1945ஆம் ஆண்டு, அந்தமான் தீவுகள் மொத்தத்தையும் மீண்டும் பிரிட்டிஷ் படை மீட்டது. 1947ல் இந்தியாவும், 1948ல் பர்மாவும் ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றன. என்றாலும், 1950ல்தான், அந்தமான்-நிக்கோபார் தீவுகள் இந்திய யூனியனில் இணைக்கப்பட்டன.

அந்தமான் தீவுக்கூட்டத்தில், 26 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக்கிறார்கள். அதே போல நிக்கோபார் தீவுக்கூட்டத்தில் உள்ள பத்து தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக்கிறார்கள்.

இத்தீவுகளின் பெரும்பகுதி மழைக்காடுகளைக் கொண்டுள்ளன. இக்காடுகளில் 200 வகையான மரங்கள் உள்ளன. இவற்றில் 30 வகை மரங்கள் வணிக ரீதியில் மிகவும் உபயோகமாக இருக்கின்றன.

பேசப்படும் மொழிகள்

மக்கள் தொகையில் 26 சதவிகிதம் பேர் பெங்காலி மொழியும், தலா 18 சதவிகிதம் பேர் இந்தியும், தமிழும் பேசுகிறார்கள். தெலுங்கு மற்றும் நிக்கோபாரிஸ் மொழி பேசுபவர்கள் 13 சதவிகிதம். மக்களில் பெரும்பான்மையானவர்கள் இந்துக்கள் என்றபோதிலும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், சீக்கியர்களும் இங்கே வாழ்கிறார்கள்.

நிர்வாகம்

அந்தமான் நிக்கோபார் தீவுகள், நிர்வாக வசதி கருதி மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் பிரதிநிதியாக துணை நிலை ஆளுனர் அந்தமான், நிக்கோ



* செல்லுலர் ஜெயில்



* உட் பிஜியன்



* கடல் பசு

பார் தீவுகளை ஆட்சி செய்கிறார். இங்குள்ள மக்கள் வாக்களித்து ஒரே ஒரு பிரதிநிதியை பாராளு மன்றத்தின் லோக் சபாவுக்கு அனுப்பி வைக்கிறார்கள். பாராளுமன்றத்தின் மாநிலங்களவையில் அந்தமான்-நிக்கோபாருக்கு பிரதிநிதித்துவம் இல்லை. காரணம் இங்கே சட்டமன்றம் கிடையாது.

தொழில்


சுமார் ஐம்பதாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் நடைபெறுகிறது. அந்தமானில் பிரதான பயிர் நெல். நிக்கோபார் தீவுகளில் தேங்காயும், பாக்கும் அதிகமாக விளைகின்றன. எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், மாம்பழம், சப்போட்டா, ஆரஞ்சு, வாழைப்பழம், பப்பாளி, அன்னாசி போன்ற பழ வகைகளும் விளைகின்றன.



* சுற்றுலாத் திருவிழாவில்...

சிற்சில பகுதிகளில் ரப்பர், மிளகு, கிராம்பு போன்றவையும் விளைகின்றன.

இங்கு பெரிய தொழிற்சாலை கள் எதுவும் இல்லை. ஆனால், ஆயிரத்துக்கும் அதிகமான சிறு மற்றும் குறுந்தொழில்கள் நடக்கின்றன. இவற்றில் கைவினைப் பொருட்கள் தயாரிப்பும், மீனைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதும் அடங்கும்.



* Boa


தனித்தன்மை

இந்தியாவுக்கு தேசிய பறவையாக மயில் இருப்பது போல, அந்தமான்-நிக்கோபார் அரசு, தங்கள் மாநிலப் பறவையாக 'உட்பிஜியன்' எனப்படும் ஒரு வகைப் புறாவை அறிவித்துள்ளது. நீண்ட வால் பகுதியைக் கொண்ட இந்த புறாக்கள் இங்குள்ள அடர்ந்த காட்டுப் பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றன. அந்தமானுக்குரிய விலங்காக கடற்பசு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தமான் பகுதிகளில் மட்டுமே காணப்படும் 'அந்தமான் பதுக்' என்ற மரவகை, இம்மாநிலத்தின் மரமாகும். இது 120 அடி உயரம் வரை வளரும்.

சுற்றுலா

பழங்குடிகளுக்குரிய பல்வேறு நடனங்கள் இங்கே உண்டு. எனினும், ஆண்டு தோறும் டிசம்பர் - ஜனவரி சமயத்தில் நடக்கும் சுற்றுலாத் திருவிழா விசேஷமானது. அப்போது பலவகையான நடனங்கள், நாடகங்கள், கண்காட்சி என்று களை கட்டுகிறது அந்தமான். இதனால் சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக வருகிறார்கள்.

அதேசமயம், அந்தமானின் பழைமையான மொழிகளில் இரண்டு வழக்கொழிந்துவிட்டன என்பதுதான் சோகம். இங்கிருந்த கோரா, போ (Khora, bo) ஆகிய பழங்குடியினத்தில் இருவர்தான் எஞ்சியிருந்தனர். சில ஆண்டுகளுக்கு முன் ஒருவர் காலமானார். எஞ்சியிருந்த 'போ' என்பவரும் சமீபத்தில் மறைந்துவிட்டார். அவரோடு, அவர் அறிந்திருந்த கோரா, போ ஆகிய மொழிகளும் மறைந்துவிட்டன!



நெஞ்சில் நிறைந்த நெருஞ்சி!

'உயர்ந்த பரிசு' கதை அருமை. பள்ளி மாணவர்களுக்கேற்ற அறிவுரைக் கதை - **கு.நித்யானந்தன், திருச்சி** ● 'பேர் சொல்ல பேத்தி' என்ற கட்டுரையைப் படித்தபோது, எனக்கு என் தாத்தா நினைவுதான் வந்தது. - **ஆர்.பிருந்தா, மதுரை** ● 'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது' என்ற குறட்கருத்தைப் பிரதிபலிக்கிறது... 'குருவிக்கடவுள்' சிறுகதை. - **ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி** ● கோகுலவின் தன்னம்பிக்கை ததும்பும் புத்துணர்ச்சி வார்த்தைகள் என்னையும் செதுக்க ஆரம்பித்துவிட்டன. - **ந.பிருந்தா, உ. எண் 1098, மயிலாடுதுறை** ● தேர்வுக்கு ஏற்ற உணவுகள் என்ற தலைப்பில் டாக்டர் பக்கத்தில் வந்த குறிப்புகள் தேர்வுக் காலத்துக்கு ஏற்ற விஷயம்! - **சு.அபிஷேக், உ. எண் 518, சென்னை** ● தேயிலை தேசம் (அஸ்ஸாம்) பற்றி பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். - **எம்.மிருணாளினி, ஏழாம் வகுப்பு, அக்ஷ எஸ்.சுந்தர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை** ● கவுதாரியின் வாழ்வியலை கவித்துவமாக வழங்கி எல்லோர் இதயத்திலும் இதமாகக் குடிபுகுந்துவிட்டீர். - **ஆர்.கே.சுந்தரூபி, மேலகிருஷ்ணன்புதூர்** ● 'இரண்டு மாணவர்களுக்காக ஒரு வகுப்பா' என்று கருதாமல் பேராசிரியர் சந்திரசேகர் தமது கடமையில் கண்ணாயிருந்ததே அவர் சிறப்பு. விடா முயற்சி, உழைப்பு இந்த இரண்டும் நம் வசமிருந்தால் எதனையும் சாதிக்கலாம் என்று உணர்த்தியது அறிவியல் கதை. - **கே.எஸ்.யோகேஷ்வரன், உ. எண் 146, திருச்சி** ● நெருஞ்சி முள் மேட்டர் (தமிழமுது) ராமாயணக் காட்சியாக விரிந்து நெஞ்சில் நிறைந்தது. - **ஆர்.ஜி.ஏ. விஜய் சாய்பாலா திருச்செந்தூர்** ● சகோதரி சஹானாவின் கடந்த கால நினைவுகளை மனதில் பதிய வைத்த 'பேர் சொல்ல பேத்தி' கட்டுரை அதன் மூலம் எங்கள் தாத்தாவின் பெருமைகளை நினைவுகூரவும் செய்தது. - **டி.எம். சிவரஞ்சனி, உ. எண் 179, ஸ்ரீ மகாதேவ குருஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்** ● விண்வெளிக்கு லிஃப்ட் என்ற புதிய பகுதியைப் படித்து வியந்தேன். அதில் சொல்லி இருந்த விஷயங்கள் எல்லாம் அற்புதமாக இருந்தன. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை** ● யானையின் பயோடேட்டா ரொம்ப பிரமாதம். கறுப்புக்குப் பிடிக்காத வெள்ளை என்று யானையின் குணங்களை அடுக்கிய விதம் எடுப்பு! -**ஆர்.உமா, திசையன்விளை** ● முழு ஆண்டுத் தேர்வு வேளையில், நினைவாற்றல் பெருக, மன அழுத்தம் நீங்க என்று குறிப்பிட்டுச் சொன்ன உணவருந்தும் முறை பிரமாதம்! - **எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை** ● பார்க்காத தாத்தாவைப் பற்றிப் பலரிடம் விசாரித்து புத்தகமே எழுதியிருக்கும் சஹானா எங்கள் நெஞ்சில் நிறைந்துவிட்டார். - **ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்** ● கே.பரத்தின் 'கமிஷனருக்கு ஒரு கடிதம்', நல்ல சமூக சிந்தனையை தந்தது. அனைவரும் சுயசிந்தனையுடன் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது ஜி.எஸ். சபரியின் 'சூழ்நிலைக்கேற்ற முடிவு'. - **ஞா.த.ரம்யா, உ. எண் 459, ஒன்பதாம் வகுப்பு, த.ஆ.வே. பெல் பள்ளி, இராணிப்பேட்டை**

கதைப்பாடல்

பாறை ஒன்றைப் பரிகசித்துப்
பறந்து வந்து சிறகடித்த
பட்டாம் பூச்சி அதனிடம்
பாறை கோபம் கொண்டதுவாம்!

''என்னைப் பார்த்து ஏளனமாய்
ஏனோ நீயும் சிரிக்கின்றாய்?
உன்னைப் போலே அற்பமில்லை
ஒழுங்காய்ப் பறந்து போவாய்நீ!

எனது வலிமை தெரியாமல்
வீணாய் மோதல் புரியாதே
பெரிய மலையின் அங்கம்நான்
உருண்டு வந்தால் தொலைந்தாய்நீ!''

என்றே கோபம் காட்டியதும்,
இரண்டு இறகும் படபடக்க
''நன்று நன்று உன்பேச்சு!
நானோ அற்பன் உன்கணக்கில்?!

ஏதும் செய்ய இயலாமல்
இருக்கும் நீயே சோம்பேறி!
பறக்கும் நானுன் பார்வைக்கு
அற்பனாகப் படுகின்றேன்!?

அங்கும் இங்கும் பறக்கின்றேன்!
அலரும் பூத்தேன் குடிக்கின்றேன்!
பொங்கும் இன்பப் பூஞ்சிட்டாய்
புவியில் மகிழ்ந்து களிக்கின்றேன்!

உழைத்து உணவை உண்பவனா
உலகில் அற்பன் சொல்வாய்நீ?
முடிந்த வரைக்கும் பிறருக்கு
மகிழ்ச்சி கொடுத்தே மடிகின்றேன்!

தேனை உறிஞ்ச, மகரந்தத்
தூளும் பரவும்; காய்பொலியும்;
தானும் வளர்ந்து பிறருக்கும்
தானம் கொடுத்தல் தகவன்றோ?



சும்மா கல்லாய்க் கிடப்பதினும்
சுறுசுறுப்பாக இருப்பவரோ
அற்பம் இந்த அண்டத்தில்?
அறியாதவனாய்ப் பேசுகிறாய்!

உன்னைக் கேலி செய்வதென்று
எண்ணம் இல்லை எனக்குள்ளே!
உன்னை வைத்து மற்றவர்க்கு
உரைக்க வந்தேன் இக்கருத்தை!"

என்று சொல்லி பூச்சியுமே
எழுந்து பறந்து சென்றதாம்!
இன்பம் கொடுக்கும் பிள்ளைகளே!
இதைநீர் உணர்தல் மிகநன்றாம்!



பொங்கும் இன்பப் பூஞ்சிட்டு!



பாசியில்

பாசி என்றால், காலை வழுக்கும் என்றுதான் பொதுவாக நமக்குத் தெரியும். ஆனால், அவற்றில் இருந்து மருந்துப் பொருட்களும், உணவுப் பொருட்களும் கூட தயாரிக்கப்படுகின்றன. மிகச் சிறிய இலைகளைக் கொண்டது இந்தத் தாவரம். இந்தப் பாசியில் பல வகைகள் உண்டு. அவை ஒவ்வொன்றும் தனித்தனி சிறப்பியல்புகளைக் கொண்டவை. அதைப் பொறுத்து, அவற்றுக்கு வெவ்வேறு பெயர்களும் வழங்கப்பட்டு வருகின்றன.



குஷன் பாசி : நூற்றுக்கணக்கான சிறிய பாசிகள் நெருக்கமாக பின்னிப் பிணைந்து உருண்டையாக குஷன் போன்று காணப்படுவதால், இது குஷன் பாசி. சில சமயம் இந்த குஷன் போன்ற அமைப்பு, தளர்ந்து, தரையில் படர்ந்து விடுகிறது.

கிளைப் பாசி : சில வகைப் பாசிகளில், தண்டிலிருந்து கிளைகள் தோன்றி,

தரைவரை படர்ந்து கிடக்கும். இவை, கிளைப் பாசி எனப்படும். இவை, ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து காணப்படும்.

குஞ்சம் பாசி : பெரிய பாசிகள் பல வளர்ந்து குஞ்சம் போன்று இருக்கும். பல கிளைவிட்டும், கிளை விடாமலும் வளரும். இந்த மிகப் பெரிய ஆஸ்திரேலிய இனப்பாசி, 80 செ.மீ. நீளம் வரை வளரும்.



பேட்டரி!

பாசியைப் பயன்படுத்தி சத்து பானங்கள், மருந்துப் பொருட்கள் தயாரிப்பில் உலக நாடுகள் பலவும் ஈடுபட்டுள்ளன. பாசியைக் கொண்டு, எடை குறைந்த, விலை குறைவான பேட்டரி தயாரித்துள்ளது ஸ்வீடன்.

ஸ்வீடன் நாட்டிலுள்ள உப்சாலா பல்கலைக் கழகத்தின் (Uppsala University) நானோ தொழில்நுட்ப வல்லுனர் மரியா ஸ்ரோமி இந்த பேட்டரியைப் பற்றித் தெரிவித்துள்ளார்.

“ ‘கிளாடோபோரா’ என்ற பச்சைப் பாசியைப் பயன்படுத்தி பேட்டரி தயாரிக்கும் முயற்சி நல்ல பலன் அளித்துள்ளது. இந்தப் பாசி, காகிதத்தைவிட 100 சதவீதம் அதிக செல்லுலோஸைக் கொண்டுள்ளது. அதனால் மின்சாரத்தை சேமிக்கவும், வெளியேற்றவும் ஆற்றல் மிக்கதாக உள்ளது.

தற்போது உள்ள பாலிமர், லித்தியம் பேட்டரிகளைவிட இந்த பேட்டரி அளவில் சிறியதாக இருக்கும். ஆனால், ஆற்றலில் அதிகமானது. அதேபோல, பாலிமர் பாட்டரியை ரீசார்ஜ் செய்ய ஒரு மணி நேரம் தேவை எனில், இதற்கு எட்டு நிமிடங்களே தேவைப் படும். எனவே, ரீசார்ஜ் பேட்டரியை பயன்படுத்துபவர் களுக்கு இது மிகவும் பயனளிக்கும்” என்கிறார் மரியா ஸ்ரோமி. அசத்துறாங்க இல்ல...!

- எஸ்.சுப்ரியா,
உ. எண் 79,
சென்னை



ஓட்டைக் காசு!

வி.ஜெயலெட்சுமி

குமரன் மிகவும் ஏழை. ஒரு நாள் அவன் தெருவில் நடந்து சென்றபோது கீழே துளையிட்ட நாணயம் ஒன்று கிடைத்தது. 'அட, துளையிட்ட நாணயம் அதிர்ஷ்டம்' என்று சொல்லி அதைப் பையில்போட்டுக்கொண்டு வீட்டுக்குப் போனான். தன் மனைவியிடம் சொன்னான். "இந்த நாணயம் எனது சட்டைப் பையில் இனி எப்போதும் இருக்க வேண்டும். சட்டையை துவைத்துக் காய வைத்ததும், இந்தக் காசை சட்டைப் பையில் வைத்து அந்தச் சட்டையையே எனக்கு அணியக்கொடு. மறந்து விடாதே" என்று சொன்னான்.

மனைவியும் அதன்படியே அந்த நாணயத்தைச் சட்டைப் பையில் போட்டு அவன் அணிவதற்காகக் கொடுத்து வந்தாள். ஜிப்பாவில் இருப்பதைப் போல, அவன் சட்டையின் பக்கவாட்டில் பை இருக்கும். அவன் வெளியே போகும்போதெல்லாம் நாணயத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொள்வான். வெளியே எடுக்க மாட்டான்.

வருடங்கள் பல கழிந்தன. ஏழை குமரன் வளர்ந்து பணக்காரனாகி விட்டான். பழைய சட்டைகளை மாற்றினான். நல்ல விலை மதிப்புள்ள சட்டைகளை வாங்கி அணிந்தான். ஆனாலும் அந்தக் காசு அவன் சட்டைப் பையில் இருந்தது.

ஒருநாள்... தான் வாங்கி வந்த புதுச் சட்டையை எடுத்த குமரன், மனைவியைக் கூப்பிட்டு துளையிட்ட நாணயத்தை எடுத்து வரச் சொன்னான். அவளும் கொண்டு வந்து தயக்கமுடன் தந்தாள். அவள் தயக்கத்தைக் கண்ட குமரன், அந்த நாணயத்தைப் பார்த்தான். அது துளையிடாத சாதாரண நாணயம்! கோபத்தால் உக்ரமானான் அவன். அவளிடம் துருவித்துருவி விசாரித்த போது அவள் சொன்னாள்.

"பல வருடங்களுக்கு முன்பு... உங்களுக்கு எப்போது இது கிடைத்து சட்டைப் பையில் போடச் சொன்னீர்களோ, அதற்கு அடுத்த நாளே அந்தக் காசு காணாமல் போய்விட்டது. எங்கு தேடியும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உங்களிடம் சொன்னால் நீங்கள் கோபப்படுவீர்களே என்று பயந்தேன். அதனால்தான் வேறு ஒரு சாதாரண நாணயத்தைப் போடலானேன். நீங்களாகப் பார்த்துவிட்டுக் கேட்டால் சொல்லிக் கொள்ளலாம் என்று சும்மா இருந்து விட்டேன். தயவு செய்து மன்னியுங்கள்."

அச்சம் குறையாமல் பேசிய மனைவியின் வார்த்தைகளைக் கேட்ட குமரன் மலைத்துப் போனான். ஆக, 'தன்னுடைய வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது துளை விழுந்த நாணயம் அல்ல. தளராத நம்பிக்கையும் உழைப்பும் தான்' என்று புரிந்ததால் உண்டான மலைப்பு!

விடையைச் சொல்; பரிசை வெல் - 33

1. பாட்டரி தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட பாசியின் பெயர் ....

2. 'தெற்குப் பகுதி' என்று பொருள்படும் இலத்தீன் மொழிச் சொல் ....

3. 'மாஸ்ட் செல்கள்' வெடித்து வெளியாகும் வேதிப் பொருள் ....

4. சத்ரபதி சிவாஜியின் குரு ....

5. 'நார்வால்' அதிகமாகக் காணப்படும் கடல் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி
பரிசு
ரூ.1000/-



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.


முடிவு தேதி : 30.3.2010

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1501


1502


1503


1504


1505


1506


1507


1508


1509


1510


1511


1512


1513


1514


1515


1516


1517


1518


1519


1520


1521


1522


1523


1524


1525

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

